பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம்
27 JUL 2004

# வலம்புரி

# VALAMPURI

ராம்கோ
சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி 12 | செவ்வாய்க்கிழமை | (27.07.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 221



நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் நேற்று கிளிநொச்சி சென்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்துக் கலந்துரையாடுவதை படங்களில் காணலாம்.

# கிழக்கில் உருவான ஆயுதக் குழுக்களால் யுத்தநிறுத்தம் கேள்விக்குறியாகியுள்ளது!

## விடார் ஹெல்கிசனிடம் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாகத் தோன்றியுள்ள ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் யுத்தநிறுத்த உடன்பாட்டை கேள்விக்குறியாக்கி உள்ளது.**

**படைத்தரப்பினரது ஆதரவு இல்லாமல் புதிய ஆயுதக் குழுக்கள் அங்கு இயங்குவது கஷ்டமான காரியமாகும். எனவே இவ் ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை அரசு கட்டுப்படுத்தவேண்டும் என தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லவும் யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு வலுச் சேர்க்கும் வகையில் நேற்று கிளிநொச்சி வந்திருந்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசனுடனான சந்திப்பை அடுத்து பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே சு.ப. தமிழ்ச்செல்வன் மேற்

(12ம் பக்கம் பார்க்க)

## ஹெல்கிசன் - பாலசிங்கம் லண்டனில் சந்திப்பர்

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் லண்டனில் சந்தித்துப் பேசவுள்ளார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள இச் சந்திப்பில் விடார் ஹெல்கிசன் தனது இலங்கை விஜயம் குறித்தும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதில் உள்ள முட்டுக்கட்டைகள் தொடர்பாகவும் அவற்றை நீக்கும் வழிவகைகள் குறித்தும் ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழு மீதான படுகொலை யுத்த நிறுத்தத்தை மீறுகிறது

## குண்டுவெடிப்பில் சிறுவன் பலி இருவர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான பெரிய ஈரற்குளத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பத்து வயது சிறுவன் ஒருவன் பலியானதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இக் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பலியான சிறுவன் ஆடு மேய்ப்பதற்காக சென்றிருந்த போது மர்மப்பொருள் ஒன்றைக் கண்டெடுத்து அதனைக் கல்லின் மீது எறிந்த போது அது வெடித்துச் சிதறியது. இதனால் சிறுவன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கம் கண்டனம் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு புறநகர்ப் பகுதியான அத்துருகிரிய கொட்டாவ பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து கருணா அணியைச் சேர்ந்த 8 பேர் நேற்று முன்தினம் சுட்டுக் கொலை செய்யப்பட்டதை அரசாங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களம் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத வன்முறைகள், விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையின் நோக்கத்திற்கும், வாசகத்திற்கும் அமைவாக இல்லை.

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேரடிப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் சுமுகமாக ஆரம்பிக்கப்படுவதற்கு இச் சம்பவங்கள் சாதகமாக அமையவில்லை. நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

பயங்கரவாத அட்டூழியங்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

**அன்பு மாணவர்களே!**
**உள்ளே**
**க.பொ.த (சா/த)**
**பரீட்சைமாதிரி வினாத்தாள் ஆங்கிலம் - 11**
**ஆக்கம்: B.S.A அரியரட்ணம்**

## மர்மப் பொருள் வெடித்தது; சிறுவர்கள் மூவர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் புலிபாய்ந்தகல் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் மூன்று சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மூவரில் ஒருவர் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த மூவரில் இருவர் சிறுமிகள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த மூன்று சிறுவர்களும் மர்மப்பொருள் ஒன்றை எடுத்து விளையாடிய போது அது வெடித்ததாகவும், இதனாலேயே அவர்கள் படுகாயங்களுக்கு உள்ளானதாகவும் வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் என். தேவராஜன் தெரிவித்துள்ளார். (ம)

## விடயங்களை உரியவாறு அணுகாவிட்டால் அபாயகரமான விளைவுகள் ஏற்படும்

### விடார் ஹெல்கிசன் எச்சரிக்கை

(நமது நிருபர்)

இலங்கையில் தொடர்ந்தும் சமாதானம் நிலை நிறுத்தப்படவேண்டுமானால் சமாதான செயற்பாடுகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும், இதனை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை நேற்று கிளிநொச்சியில் சந்தித்து சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் குறித்து பேசியபின் பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே ஹெல்கிசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கருணா விவகாரத்தில் தலையீட
## நோர்வே மறுப்பது தவறானது

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து கருணா பிரிந்து சென்றமை உள்வீட்டு விவகாரம் என நோர்வே கூறிவருவது மிகத் தவறானது.

நோர்வே இந்தப் பிரச்சினையைத் தீர்க்காது விட்டமையினால் தான், நாட்டில் கொலைச்சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. அது மட்டுமன்றி சமாதான நடவடிக்கைகளுக்கும் இந்தப் பிரச்சினை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்டுள்ள அரசியல் ஆய்வாளர்கள்,

கருணா, விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற காலம் முதல் கிழக்கு மாகாணத்தில் படுகொலைச் சம்பவங்கள் அதிகரிக்கத் தொடங்கின.

இந்தக் கொலைகள் தற்போது தென் பகுதிக்கும் குறிப்பாக கொழும்புக்கும் பரவிவிட்டன.

அரசும் கருணாவுக்கு ஆதரவை வழங்கி விடுதலைப் புலிகளின் கோபத்துக்கு இலக்காகி வருகின்றதே தவிர இருதரப்பினரையும் சமாதானப்படுத்திவைக்க விரும்புகின்றதில்லை.

இதனால் தான், சமாதான நடவடிக்கைகள்கூட தாமதமாகிக் கொண்டிருக்கின்றன.

கருணா அணியினர் கிழக்கு மாகாணத்தில் மக்களோடு மக்களாக ஒரு பகுதியினரும், காட்டுப் பகுதியில் இன்னொரு பிரிவினரும், தென்னிலங்கையில் ஒரு பகுதியினருமாக இருக்கின்றார்கள்.

இதற்கிடையில், நேற்று முன் தினம் கொழும்பில் 8 பேர் கொல்லப்பட்டனர் இவர்கள் கருணா அணியைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் இறந்தததினால் கருணா பலவீனப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

ஆனால் என்னைப்பொறுத்தவரையில் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏனெனில், நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல கருணா அணியினர் மூன்று பகுதியாக பிரிந்து மூன்று இடங்களில் வாழுகின்றனர்.

இது ஒரு புறமிருக்க, கொல்லப்பட்ட 8 பேரும் கருணா தலைமையில் அரசியல் கட்சி ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-10,62)

## ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் ஸ்தாபகர் தினமும் 188 ஆவது பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் முதலாம் திகதி அதிபர் கே.இராசதுரை தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில், பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் ஜனாதிபதி சட்டத் தரணியுமான எ.ஆர்.சுரேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

அன்றைய தினம், பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட மாணவர் சேவை நிலையம், மாநாட்டு அறை, ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கணனி நிலையம் ஆகியன திறந்துவைக்கப்படவிருப்பதுடன், சம்பிரதாயபூர்வமாக பாடசாலை இணையத் தளத்தில் இணைக்கப்படவுள்ளது. (உ-16)


## பருத்தித்துறை பிரதேசசபை

## கேள்வி அறிவித்தல்

அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிரல் 1 தொடக்கம் 2 வரையான வேலைகளை நிறைவேறுவதற்கு இக்ராட் இல் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக் கூடிய ஒப்பந்தகாரரிடமிருந்தும், நிரல் 3 இலுள்ள வேலையை நிறைவேற்றுவதற்கு இக்ராட் 9 இல் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக்கூடியதுடன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையிலோ, வீதி அபிவிருத்தித் திணைக்களத்திலோ வேலை நிறைவேற்றியமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ் சமர்ப்பிக்கக்கூடிய ஒப்பந்தக்காரரிடமிருந்தும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

படிவ விநியோகம் :- 09.08.2004 பிற்பகல் 3.00 மணிவரை
படிவம் ஏற்றல் :- 10.08.2004 நண்பகல் 12.00 மணிவரை
படிவம் திறத்தல் :- 10.08.2004 பிற்பகல் 2.00 மணிக்கு

### அட்டவணை

| வேலை விபரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் | வற்வரி |
|---|---|---|---|
| 1. பொது நூலகத்தில் நீர்த் தொட்டி அமைத்தல் | 900/= | 300/= | 45/= |
| 2. போக்கறுபபு நித்தியவெட்டை வீதி நீர்மாணம் | 7,000/= | 300/= | 45/= |
| 3. சக்கோட்டை நாச்சிமார் கோவில் வீதி திருத்தம் | 10,000/= | 300/= | 45/= |

கேள்விகள் யாவும் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு மூலப்பிரதி "செயலாளர், பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி" என்ற முகவரிக்கும், இணைப்பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் பதிவஞ்சல் மூலமோ அல்லது நேரடியாக சபையின் கேள்விப் பெட்டியில் சேர்ப்பதன் மூலமோ படிவமேற்றல் திகதி நேரத்திற்கு முன்னர் கிடைக்கச்செய்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான விடயங்களில் கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும். மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

சிதம்பரப்பிள்ளை பசுபதி,
செயலாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை,
புலோலி.

பருத்தித்துறை பிரதேசசபை,
தலைமை அலுவலகம், புலோலி.
22.07.2004.

(C/380)


## சிபுசோரன் இருப்பிடத்தையறிய பா. ஜ. கட்சி பேரார்வம்

(டில்லி)

குற்றவழக்குகளில் தொடர்புடைய மத்திய அமைச்சர்கள் அனைவரையும் பதவியிலிருந்து நீக்குமாறு தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சி எம்.பிகள் குடியரசுத் தலைவரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

கூட்டணியின் அமைப்பாளர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் தலைமையில் நேற்றுமுன்தினம் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு ஊர்வலமாகச் சென்ற எம்.பிகள் குடியரசுத் தலைவரிடம் தமது கோரிக்கை தொடர்பான மனுவொன்றை அளித்தனர்.




மாநிலங்களவையின் துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரஹ்மான் கான் நேற்று முன்தினம் புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசினார்.

பின் செய்தியாளர்களிடம் பேசிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி, குற்றவழக்குகளில் தொடர்புடைய அமைச்சர்கள் மீது நடவடிக்கையெடுக்கும்படி பிரதமருக்கு அறிவுறுத்துமாறு குடியரசுத் தலைவரைக் கேட்டுக் கொண்டதாகத் தெரிவித்தார்.

மத்திய அமைச்சரவை பதவியேற்றவுடனேயே குற்றவழக்குகளில் தொடர்புடைய அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி குடியரசுத் தலைவர் மற்றும் பிரதமரிடம் தாங்கள் வலியுறுத்தியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாததால்தான் மீண்டும் குடியரசுத் தலைவரைச் சந்தித்ததாக அவர் கூறினார்.

கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்ட முன்னாள் மத்திய அமைச்சர் சிபு சோரன் எங்கிருக்கிறார் என்பதை பிரதமர் மன்மோகன் சிங் விளக்கவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார். (து)




## இந்தியச் செய்திகள்

## காவல் நிலையத்தை தாக்கிய மாணவர்கள்

மாணவர் அமைப்புக்களில் உள்ள சிலர் பாலக்காடு மாவட்டம் பாளையார் காவல் நிலையத்தைத் தாக்கி அங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்த 2 மாணவர்களை விடுவித்துள்ளனர்.

பொறியியல் கல்லூரி மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் தொடர்பாக கேரளாவில் இடதுசாரிக்கட்சிகளைச் சேர்ந்த மாணவர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்திவருகின்றனர்.

இதையடுத்து பாலக்காடு மாவட்டத்திலிருந்து 2 மாணவர்களைப் பொலிஸார் முன்னெச்சரிக்கையாக கைது செய்து தமிழக எல்லையிலுள்ள பாளையார் காவல் நிலையத்தில் வைத்திருந்தனர்.

இந் நிலையில் ஜனநாயக வாலிபர் சங்கம் மற்றும் இந்திய மாணவர் பெருமன்றத்தைச் சேர்ந்த சிலர் நேற்றுமுன்தினம் பாளையார் காவல் நிலையத்துக்குள் அதிரடியாக நுழைந்து அங்கு காவலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு மாணவர்களையும் விடுத்தனர்.

மேலும் காவல் நிலையத்தை இவர்கள் தாக்கிச் சேதப்படுத்தியதாகவும் இது தொடர்பாக 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (து)

### தி.மு.க. நிதியுதவி

(வேலூர்)

காட்பாடி அருகே குட்டையில் மூழ்கி உயிரிழந்த 4 பள்ளிச் சிறுமியர்களின் குடும்பத்துக்கு தி.மு.க. அறக்கட்டளை சார்பில் தலா 5 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது.

கடந்த 18 ஆம் திகதியன்று வேலூர் அரும்பருத்திக் கிராமத்தில் குளத்தில் நீராடச் சென்ற முறையே 15,13,11,9 வயதுடைய நான்கு மாணவிகள் ஒருவர் பின் ஒருவராக நீரில் மூழகி உயிரிந்தனர்.

இவர்களது குடும்பத்துக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உத்தரவின் பேரில் தி.மு.க. அறக்கட்டளை சார்பில் தலைமை நிலைய முதன்மைச செயலர் துரைமுருகன் மேற்படி நிதியுதவியை வழங்கினார். (து)

## ஜெயலலிதா ஆட்சி நீடிக்கலாமா? அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கேள்வி

(சென்னை)

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு, அமைதி காப்பாற்றப்படவில்லை. கடந்த ஒரு மாதத்தில் மட்டும் தமிழகம் முழுவதிலும் எண்ணற்ற கொலை, கொள்ளை, கடத்தல் சம்பவங்கள் நடந்துள்ளன. பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான முத்திரைத்தாள் மோசடியில் பொலிஸ் உயரதிகாரி கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கடற்கரையில் கணவன், மனைவியை மிரட்டிக் கொள்ளையடித்ததாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். மற்றொரு பொலிஸ் அதிகாரி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்பட நேர்மையான முறையில் அ.தி.மு.க. அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று யாராவது கூறுவார்களா? இந்த ஆட்சி இனியும் நீடிக்கக் கூடாது.

இவ்வாறு தி.மு.க. தலைவர் கருணாநிதி கடந்த ஞாயிற்றுக் கிழமை சென்னையில் நடைபெற்ற அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி இல்லாமல் ஜனநாயகம் இயங்க முடியாது. ஆனால் இங்கு அ.தி.மு.க. ஆட்சியில் எதிர்கட்சிகளுக்கு இடம் இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. பேரவையில சொல்ல வேண்டியதை மக்கள் மன்றத்தில் சொல்ல வேண்டிய நிலைக்கு வந்துள்ளோம் என அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார். (து)

# உடல் நலம் பேணும் தேன்


## இயற்கை அன்னையின் அன்புப் பரிசு

### மருத்துவ விளக்கம்

டாக்டர்
என்.எஸ்.சண்முகவேல்

**தே**ன் என்றால் நமது நினைவுக்கு வருவது இனிமை நிறைந்த சுவையும், தித்திப்பும், நறுமணமும் கலந்த உணர்வுதான்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்துவரும் மனித வரலாற்றின் ஒவ்வொரு படியிலும் தேனைப் பற்றிய சிறப்புக்களை உதாரணம் காட்டிப் பாடாத நாடில்லை. எழுதாத கவிஞனும் இல்லை. உயிரை வாழவைக்கும் செழுந்தேனை



அன்று அப்படி அவர்கள் பாடியது அதன் சத்து மிகுந்த தன்மைக்காகவோ, உணவாகக் கொள்ளப்படும் அரும் மருந்து என்பதற்காகவோ மட்டும் அல்ல; அன்றைய வாழ்வில் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இனிப்புச் சுவை என்று ஒன்று இருந்ததேயானால் அது தேனாகத்தான் இருந்திருக்க முடியும்.

இன்று நம்மை ஆட்டுவிக்கும் சர்க்கரைகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நாமே தேவையைக் கருதி தயார் செய்து கொண்டதாகும். இன்றைய மேல்நாட்டு விஞ்ஞானிகளும், மருத்துவ ஆராய்ச்சியாளர்களும் உணவியல் வல்லுனர்களும் சேர்ந்து நடத்திய ஆராய்ச்சியில் மற்ற சர்க்கரைகளுக்கு இல்லாத சிறப்புத் தன்மைகளும் குணங்களும் தேனுக்கு இருப்பதை அறிந்துள்ளார்கள்.

### தேனின் முக்கியத்துவம்

இரத்தத்தில் உடனே கலக்கின்ற அதன் தனித்தன்மை இரத்த ஓட்டத்தில் கலந்து உயிரணுக்களில் தன்மையாகும் சிறப்பு, ஈரத்தை உறிஞ்சும் அதன் பண்பு ஆகியவை தேனின முககியத்துவத்தை அதிகமாக்கி இருக்கின்றன.

பலவிதப்பட்ட மலர்களிலிருந்து சேகரிக்கப்படுகின்ற தேனானது, பல்வேறு மருத்துவ குணங்களைக் கொண்டது. தேன் கொம்புத்தேன், மலைத்தேன், கொசுந்தேன், பொந்துத்தேன் அல்லது குழித்தேன் என்று பல நிலைகளில் நமக்குக் கிடைக்கின்றது.

தேனில் சர்க்கரை என்னும் மாவுப்பொருளும் மற்றும் புரதம், கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு, விட்டமின் - சி போன்ற பல உயிச்சத்துக்களும் இதில் உள்ளன.

உடல் சீராக வளர்ச்சியடைவதற்கும், வளர்ச்சி பெற்ற உடலின் நலம் குன்றாமல் பேணப்படுவதற்கும் தேனிலுள்ள தாமிரம், மக்னீசியம், பொட்டாசியம், கந்தகம், குளோரின் போன்ற தாது உப்புக்கள் பயன்படுகின்றன.

விஞ்ஞான அறிவியல் ரீதியாக மனித உடலில் உள்ள இரத்தத்தின் **80% Alkalinity** என்று கூறப்படும். காரத்தன்மை கொண்டதாகவும் **20% Acidity** என்னும் அமிலத்தன்மை கொண்டதாகவும் இருக்கவேண்டும். இவ்வித நிலை மாறி அமிலத்தன்மை உடலில் அதிகமாகும் பொழுது மூட்டுவாத நோய, வாயு உபாதை, குடல் புண், தோல் வியாதிகள், தலைவலி, வாந்தி, மயக்கம் போன்ற பலவிதத் தொல்லைகள் ஏற்பட ஏது வாகிறது.

இயல்பாக ஒருவர் தினமும் 2 ஸ்பூன் தேன் சாப்பிட்டு வரும் தருணத்தில், தேனிலுள்ள காரத் தன்மை மனித இரத்தம் எப்போதும் மாறாது கெடுதலற்ற நிலையிலிருக்க ஏற்றதாக அமைத்துக் கொள்கின்றது.

அசுத்தம் நிறைந்த மனித இரத்தத்தை சுத்திகரிக்கும் குணம் கொண்ட தேன் ஒரு கிருமிநாசினியாகவும் கூட இயங்குகின்றது. அமெரிக்காவிலுள்ள ஒரு ஆராய்ச்சிக் கூடத்தில் பேக்டிரியாலஜி அறிஞரான மால்ட்டர் சாக்கெட் என்பவர் இதுபற்றிய ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டார். மனித உடலில் ஏற்படும் நாள்பட்ட நோய்களைக் கண்டறிய சிறுநீர் மற்றும் இரத்தம் சம்பந்தமான 'கல்ச்சர்' பரிசோதனை செய்து பார்ப்பது போல மனித உடலைத் தாக்குகின்ற பலவிதப்பட்ட நோய்க் கிருமிகளையும் தேனில் செலுத்தி ஆராயச்சி மேற்கொண்டார். தேனில் அவை வளர்கின்றனவா? வாழ்கின்றனவா? பல்கிப்பெருகுகின்றனவா? அல்லது மாய்ந்து ஒழிகின்றனவா? என்பதே அவரது மாபெரும் ஆராய்ச்சி.

குடல் காய்ச்சல் எனக் கூறப்படும் டைபாயிடு காய்ச்சலின்போது காணப்படும் கிருமிகள் 48 மணி நேரத்துக்கு மேல் வாழ முடியவில்லை. நிமோனியா காய்ச்சலின் போது காணப்படும் கிருமிகளோ சுத்தமான தேனில் போட்ட நான்கே நிமிடங்களில் மடிந்துவிட்டன. சீதபேதியின் போது உண்டாகும் கிருமிகளோ தேனில் 10 மணிநேரம கூட தாக்குப்பிடிக்க முடியவில்லை. இதுபோன்ற பல ஆராய்ச்சிகள் மூலம் தேன் ஒரு பாதுகாக்கும் உணவு என்பதோடு அது ஒரு நன் மருந்தாகவும் நமக்கு பயன்பட்டு வருகின்றது என்பது நிரூபணமாகின்றது.

தேன் பாலைவிட பல மடங்கு வெப்பம் தருவது. இறைச்சி, மீன், முட்டை, காய் இவைகளைவிட பன்மடங்கு சக்தி தருவது மிகப் பெரிய (முட்டையிலிருந்து பெறுகின்ற கலோரிகளின் அளவைவிட சற்று அதிகமாகவே ஒரு ஸ்பூன் தேனில் பெறமுடியும் என்று பேராசிரியர் கிளம்பர் கூறுகின்றார்.

பொதுவாக சர்க்கரையிலுள்ள சத்துக்கள் இரத்தத்தோடு கலந்து உடலுக்குப் பயன்படவேண்டுமென்றால் உணவு மண்டலத்தில் பல மாற்றங்களைப் பெறவேண்டும். தேனில் உள்ள சர்க்கரை எளிதானது. விரைவில் இரத்த ஓட்டத்தில் கலக்கக்கூடியது. இதற்குத் தனியாக ஜீரணமாதல் நடைபெறவேண்டியதில்லை. தேனை நாம் வாயிலிட்ட உடனேயே அதில் பாதியளவு இரத்தத்தில் கலந்துவிடுகின்றது. மீதம் உள்ள தேனும் வயிற்றில் இறங்கியவுடன் குடலால் உறிஞ்சப்பட்டு ஈர்த்துக் கொள்ளப்படுகின்றது. தேன் சாப்பிடும் போது இதயம் உடனடியாக ஊக்குவிக்கப்பட்டு உடல் களைப்பு உடன் நீங்கிவிடும் இரகசியம் இது தான். சோர்வுக்கு தேன் நல்ல மருந்து.

ஒருநாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு இரண்டு ஸ்பூன்தேன் போதுமானது. இன்று குழந்தைகளுக்கு கொடுத்து வரும் சத்திழந்த வெள்ளைச் சர்க்கரையைவிட தேனைப் பயன்படுத்துவது பலமடங்கு நன்மை தரக்கூடியதாக இருக்கும். குழந்தைகளுக்கு ஏற்படும் மலச்சிக்கல், அஜீரணம் இவைகளைப் போக்க உறுதுணையாக இருக்கின்றது.

வளரும் குழந்தைகளுக்கு இடையிடையே தேன் பருகக் கொடுத்தால் விரைவில் அவை தெளிவாகப் பேசத்துவங்கிவிடுகின்றன. மனித ஞாபக சக்திக்கு அருமருந்து தேன் என்பதும் ஆராய்ச்சி பூர்வமாகக் கண்டறியப்பட்டுள்ளது.

### தேன் - ஒரு மருந்து

ஐரோப்பிய மருத்துவர்கள் தங்கள் வாழ்வில் பெற்ற மருத்துவ அனுபவங்களால் பல நோய்களுக்கு தேனை மருந்தாகப் பயன்படுத்தி இருக்கின்றனர். கிரேக்கரும் இத்தாலியரும் பழங்காலத்திலிருந்தே இருமல், போன்ற நோய்களுக்கும் அஜீரணம், மலச்சிக்கல் போன்ற சிரமங்களுக்கும் தேனைக் கொடுத்து வந்திருக்கின்றனர். தொண்டை, மூச்சுக்குழல் ஆகியவற்றின் தொல்லைகளுக்குச் சம அளவில் தேனையும், எலுமிச்சம் பழச்சாற்றையும் எடுத்துக் கலந்து இலேசாக சூடாக்கித் தருவது சிறந்த மருந்தாக அமையும்.

குழந்தைகளின் இருமலுக்கு எலுமிச்சம் பழச்சாறு, தேன் இவற்றோடு சம அளவில் நீரைக் கலந்து கொடுப்பது சிறப்பானது. பார்லிக் கஞ்சியுடன் தேனைக் கலந்து கொடுத்தால் மலச்சிக்கல், அஜீரணம், மூச்சுக்குழல் அலர்ஜி, ஆஸ்தமா, நாள்பட்ட சளி, தொண்டை வறட்சி ஆகியவைகளுக்கு நல்ல பலனைத் தரும்.

ஒரு அவுன்ஸ் கஞ்சியில் ஒரு ஸ்பூன் தேன்கலந்து தருவது மூச்சுக்குழல் அலர்ஜியால் ஏற்படும் நிமோனியாக் காய்ச்சலுக்கு சிறந்தது. வயிற்றுப் போக்கின்போது சவ்வரிசிக்கஞ்சி மற்றும் பார்லிக் கஞ்சி அல்லது ஆரரூட் கஞ்சியுடன தேன் கலந்து கொடுக்க வயிற்றுப் போக்கு விரைவில் கட்டுப்பட்டுவிடும்.

வாந்தியுடன் கூடிய வயிற்றுப் போக்கின் போது தேநீருடன் சிறிது தேனும், எலுமிச்சம்பழ இரசமும் சேர்த்துக் கொடுக்க விரைவில் சிரமம் தணியும். வாந்தி, தலைச் சுற்று மற்றும் பசியின்மை போன்ற சிரமங்களுக்கு காலை, மாலை இருவேளையும் ஒரு ஸ்பூன் இஞ்சிச் சாறுடன் ஒரு ஸ்பூன் தேன், அரை எலுமிச்சம்பழத்தின் சாறு கலந்து கொடுக்க விரைவில் முன்னேற்றம் கிடைக்கும்.

### இதயம் வலுப்பெறும்

பொதுவாக தேன் இதயத்தை வலுவூட்டும் குணமுடையது. இதய பலவீனம் உள்ளவர்கள் படுக்கப் போகும் முன்பும், இரவில் விழித்துக்கொள்ளும்போதும் ஒரு டம்ளர் நீரில் தேனையும் எலுமிச்சம் பழச்சாற்றையும் கலந்து அருந்த வேண்டும்.

தொண்டைவலி, தொண்டைக் கரகரப்பு, சளி, எச்சில் விழுங்க, பேச இயலாமை போன்ற சிரமங்கள் இருந்தால் தேனுடன் கல் சுண்ணாம்பு சிறிதளவு சேர்த்துத் தொண்டையின் மேற்பகுதியில் பற்றுப்போட காலையில் குணமாகி இருப்பதை உணரலாம். பாடகர்களுக்கு இது முதல் உதவிப் பெட்டி போன்றது.

ஆறாத குடல்புண், தீராத மூட்டுவலி, தோல்வியாதி போன்றவைகளுக்கு சர்க்கரையைத் தவிர்த்து எல்லாத் தேவைகளுக்கும் தேன் மட்டும் பயன்படுத்திவந்தால் விரைவில் நல்ல குணம் தெரியும்.

பொதுவாக காலையில் வெறும் வயிற்றில் ஒரு டம்ளர் நீரில் $1/2$ எலுமிச்சம்பழம், தேன்கலந்து சாப்பிட்டால் உடலில் உள்ள கழிவுகள் நீக்கப்பெற்று, வேண்டாத கொழுப்புத் திட்டுகள் குறைக்கப் பட்டு எடை குறைந்து வருவதைக் காணலாம்.

இரவில் தூங்கு முன் பாலுடன் தேன சேர்த்து சாப்பிட உடல் எடை கூடிவருவதைப் பார்க்கலாம்.

உடலில் தோன்றும் சிலந்திக் கட்டிகள் மற்றும் கொப்புளங்கள் மீது தேனும், சுண்ணாம்பும் கலந்து பற்றுப்போட பழுத்து ஓரிரு நாட்களில் உடைந்துவிடும்.

3-4 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் இரவில் படுக்கையிலேயே சிறுநீர் கழிக்கும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டிருந்தால் படுக்கப்போகும் முன்பு ஒரு டீஸ்பூன் வீதம தேன் கொடுத்துவரலாம். அது நரம்புத் தளர்ச்சியைப் போக்கி நீர்ப் பெருக்கத்தைக் குறைத்து படிப்படியாக கட்டுப்படுத்திவிடும்.

இரவில் குறைவான தூக்கம் உடையவர்களுக்கும் தூக்கமின்மையால் அவதிப்படுபவர்களுக்கும் தேனும் எலுமிச்சம்பழமும் சேர்ந்த பானம் சிறந்த பலனைக் கொடுக்கின்றது. தொடர்ந்து ஒரு வாரம் வெதுவெதுப்பான நீரில் பருகி வர ஆழ்ந்த நிம்மதியான தூக்கம் வருவதை உணரலாம்.

தினமும் உணவுடன் தேன் சேர்த்து வருவதால் கொழுப்புச் சத்து குறைவதுடன் இருதயத் தாக்குதல் வருவது தவிர்க்கப்படுகிறது என்று ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டறிந்து இருக்கின்றனர்.

தேக நலத்திற்கு ஏற்றவாறு இரு வேளையிலும் இரண்டு டீஸ்பூன் வீதம் நீருடன் கலந்து சில மாதங்கள் தொடர்ந்து சாப்பிட்டு வர காமாலை, கல்லடைப்பு, நீரடைப்பு, பக்கவாதம், சூலை, நீடித்த ஒரு பக்கத் தலைவலி, தோல் வியாதிகள் பற்சிதைவு போன்ற தொல்லைகள் நம்மிடம் நெருங்க விடாது பார்துக்கொள்ளும். தண்ணீரில் கலந்து அருந்தினால் சிறுநீர் பெருகும். நீர்த் தாரையிலுள்ள புண்கள் ஆறும். தாது பலத்தை அதிகரிக்கச் செய்யும்.

தொடர்ந்து தேனை உபயோகப்படுத்தி வருபவர்களுக்கு கண் பார்வை சம்பந்தமான கோளாறுகள் வராது.

நிமோனியா, டைபாயிடு காய்ச்சல் வந்த நபர்களுக்கு ஏற்பட்ட பலவீனத்தைப் போக்க நல்ல உணவும், மருந்தும் தேனைத் தவிர வேறு ஒன்றும் இருக்கமுடியாது.

நீடித்த வாய்ப்புண் குணமாக 10 பெரிய அளவு எலுமிச்சை பழச் சாற்றுடன் $1/2$ லட்டர் தேன் கலந்து மண் பாத்திரத்தில் கொதிக்கவைத்து இறக்கி கண்ணாடிப் பாத்திரத்தில் பத்திரப்படுத்தலாம். காலை, பகல் உணவுக்கு பின் 1 ஸ்பூன் வீதம் சாப்பிட்டுவர வாய்ப்புண் ஆறிவிடும்.

ஆண்மைப் பெருக்கத்திற்கு 1 கிலோ பேரீச்சம் பழத்தோடு 1 கிலோ தேன் சேர்த்து கண்ணாடிப் பாத்திரத்தில் 2 மணிநேரம் ஊற வைக்கவேண்டும். காலை உணவிற்குப் பின் 3 பேரீச்சம்பழமும் இரவு உணவிற்கு பின் 5 பேரீச்சம் பழமும் அருந்திவரவேண்டும். குழந்தை இல்லாதவர் சாப்பிட்டுவர விரைவில் அப்பேற்றைப் பெறுவர்.

100 கிராம் மாம்பழத்துடன் 8 ஸ்பூன் தேன் கலந்து தொடர்ந்து 40 நாட்களுக்கு உண்டுவர உடல் வலுவடையும். முகம் அழகுபெறும். கண் நரம்பு சம்பந்தப்பட்ட வியாதிகள் போய்விடும். வயிறு தொடர்பான பல வியாதிகளும் நீக்கப்படும். உடல் எடை குறைவாக உள்ளவர் முயற்சித்தால் வாரம் 1 கிலோ எடை கூடும்.

நெஞ்சுச்சளிக்கு துளசிச்சாறு 2 டீஸ்பூனோடு தேன் 1 டீஸ்பூன் சேர்த்து காலை - மாலை சாப்பிட்டுவர விரைவில் கபக்கட்டு நீங்கி விடும்.

தேனின் பலவிதப்பட்ட பயன்களைப் பற்றித் தெரிந்து கொண்டோம். இன்றளவில் தேன் என்னும் பெயரில் சர்க்கரைப் பாகினைப் பக்குவப்படுத்தி பலரையும் ஏமாற்றும் பெருங்கூட்டம் எங்கும் இருந்து வருகின்றது. வாங்குபவர்கள் அது தேன்தானா என்பதைத் தெரிந்து வாங்குவது புத்திசாலித்தனமானது. தெருவில் விற்கப்படும் தேனை வாங்காது விட்டுவிடுவது நல்லது.

உடல் நலம் வேண்டுவோர்க்கு இயற்கை அன்னை மகிழ்ந்து அளிக்கும் அன்புப் பரிசு தேனைத் தவிர வேறொன்று இருக்க முடியாது என்பதை அறிவீர்கள்! பல நல்ல மருத்துவ குண நலன்களைத் தன்னகத்தே கொண்ட சிறந்த தேனினை தேடிப் பெறுவது உரிய முறையில் பயன்படுத்தி சீரிய வாழ்வினைப் பெற்று வளமோடு வாழ முயற்சிப்போம். □

---

## அவுஸ்திரேலிய இராணுவத் தளபதி இரகசியப் பயணம் மேற்கொள்ளவில்லை

## படைத்தரப்பு மறுப்பு

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலிய இராணுவத் தளபதி கடந்த 22 ஆம் திகதி யாழ்.குடாநாட்டிற்கு இரகசிய விஜயம் செய்ததாக வெளியான செய்தியை பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் மறுத்துள்ளது.

மாறாக கடந்த 22 ஆம் திகதி இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் வின்ஸ் மற்றும் அவுஸ்திரேலியத் தூதராக இரண்டாவது செயலாளர் வில்நன்கேவிஸ் ஆகியோர் யாழ்.குடாநாட்டு நிலைமைகளை ஆராயும் பொருட்டு இங்கு வருகைதந்திருந்ததாகவும், அவர்கள் யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலையகத்தில் வைத்து யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எம்.டி. எஸ். சந்திர பாலவினால் வரவேற்கப்பட்டதுடன், அவர்களுக்கு குடாநாட்டின் தற்போதைய பாதுகாப்புச் சம்பந்தமாக விளக்கமளிக்கப்பட்டதாகவும் படைத் தரப்பு தெரிவித்துள்ளது

இதேவேளை இவர்கள் பொது மக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து தமது நோக்கம் தொடர்பில் ஆராய்ந்து சென்றமையையும் படைத்தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

## சுதந்திரமாக நடமாடும் தமிழக மக்களை விட

# போரின் மடியில் தவழும் ஈழக் குழந்தைகளுக்கு தமிழுணர்வு அதிகம்

## உலகத் தமிழர் பேரவை மாநாட்டில் சந்திரசேகரன் எம்.பி

**தமிழீழ விடுதலைப் போராளிகளின் கைகளில் ஆயுதங்கள் இருக்கலாம். ஆனால் அவர்கள் நெஞ்சத்தில் வேரூன்றி இருப்பது தமிழ் என்ற சிந்தனை மட்டுமேயாகும். துப்பாக்கிக் குண்டுகளினால் அவர்களது உடம்பிலிருந்து வெளியேறும் குருதியில் கூட தமிழ் மணம் தான் வீசும்.**

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பெங்களூரில் நடைபெற்றஉலகத் தமிழர் பேரவை மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகதின் செயலாளரும் எம்.பி.யுமான வைகோ, தமிழ் கூட்டமைப்பு எம்.பி. மாவை சேனாதிராஜா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய சந்திரசேகரன் மேலும் கூறியதாவது,

### உலகத் தமிழர் ஓரணியில்

உலகத் தமிழர்களையெல்லாம் உணர்வு ரீதியாக ஒன்றிணைக்க வேணடுமென்பதில் அக்கறை காட்டியவர்களின் வரலாறு மிக நீண்டது. அதில் தனியான ஒரு இடத்தை தனதாககிக் கொண்டவர் மறைந்த தனிநாயக அடிகளார். அவரை ஈன்றெடுத்த ஈழப,மி அமைந்திருக்கும் இலங்கை நாட்டிலிருந்து நான் வந்து இந்நிகழ்வில் கலந்து கொள்வது எனக்குக் கிடைத்த மிகப் பெரும்வாய்ப்பாகவே கருதுகிறேன.

அரசியல் ரீதியாகவும், இன எழுச்சிககாகவும், தொடர்ச்சியாக தூய பணியாற்றிவரும் பழ. நெடுமாறனின் விடா முயற்சியோடு தொடருகின்ற சேவையைக் கண்டு வியக்கின்றேன், பாராட்டுகின்றேன், வணங்குகின்றேன்.

உலகமெங்கும் தமிழர்கள் பரந்து வாழந்து வருகிறார்கள் என்பது பெருமைக்குரியது தான். ஆனால் சிதறி வாழும் இந்த தமிழர்கள் தமது தனித்துவத்தை எந்தளவுக்குப் பாதுகாத்து, வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது அச்சத்தை ஏற்படுத்துகின்ற கேள்வியாக அமைந்துள்ளது.

இந்த கேள்விக்குறியை ஆச்சரியக்குறியாக மாற்றுவது ஒன்றும் இயலாத காரியமில்லை. ஆனால் அதற்கு என்ன செய்யப்போகிறோம். எப்படி செய்யப்போகிறோம் நமது தமிழினத்தின் அடையாளம் அழிந்து விடக்கூடாது என்பதில் அனைவரும் அக்கறையோடு செயல்பட்டாக வேண்டிய காலத்தின் கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது.



### தமிழ்மொழிதேய்கிறது

தமிழ்நாடு என பெயர் வைத்தோம். தமிழ் மொழி செம்மொழி என்ற அங்கீகாரத்தை பெறுவதில் வெற்றி இலக்கை நோக்கி நகர்ந்து விட்டோம். ஆனால் தமிழ்நாட்டில் கூட தமிழ்மொழிப் பிரயோகம் தேய்கிறதா, வளர்கிறதா என்பதில் இன்றும் எனக்குத் தெளிவில்லை. இதனை ஆய்வாளர்களும், தமிழ் அறிஞர்களும் தான் தீர்மானிக்க வேண்டும்.

தமிழ்நாட்டுக்கே இந்த நிலையென்றால் உலகமெங்கும் சிதறி வாழுகின்ற தமிழர்கள் தங்களுடைய தனித்துவத்தைக் காப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்.

தமிழ்மொழியின் எதிர்காலத்திற்கு ஆபத்துக்கான அடையாளம் தெரிகின்ற இந்நேரத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி-தான் நமது மொழிக்கும் இனத்திற்கும் அபயம் தருகின்ற ஒன்றாக அமையும் என ஆறுதல் அடைகிறேன்.

வளர்ந்து முதிர்ந்த மரங்களை விட கன்றுகளைப் பாதுகாப்பதில் தான் கவனம் அதிகம் தேவை என சீன பழமொழி கூறுகின்றது. இவ்வகையில் வயது முதிர்ந்தவர்களிடம மொழியின் தொன்மையைப் பற்றியும், செம்மையைப் பற்றியும் பேசிக்கொண்டிருப்பதை விட நமது குழந்தைகளான அரும்புகளிடம் தமிழன் அருமையைப் புரிந்துகொள்ள வைக்க புதுவழி தேடவேண்டும்.

தமிழன் உலகெங்கும் பரந்து வாழ்கின்றான். அதைவிட உலக நாடுகளிலே கொடியேற்றி ஆட்சிசெய்த வரலாறு தான் முககியமானது. அந்தந்த நாடுகளில் தமிழர்களின் ஆதிக்கத்தை வெளிப்படுத்தும் ஆவணங்களும், கல்வெட்டுகளும், வரலாற்றுச் சின்னங்களும் இன்றும எச்சங்களாக மிஞ்சிப்போய் இருக்கின்றன. இவைகளையெல்லாம் ஆராய்ந்து அறிந்து தமிழினத்தின் வரலாறாக எதிர்கால தமிழ் சந்ததிக்குக் கையளிக்க வேண்டும்.

### ஐந்து அம்சத் திட்டம்

உலக நாடுகளில் வாழும் தமிழர்களை ஒன்றிணைத்து மொழி மீட்பு, பண்பாடு மீட்பு, வரலாறு மீட்பு, இன மீட்பு, மண் மீட்பு ஆகியவற்றிறகாக ஐந்து அம்சத் திட்டத்தை உலக தமிழ்பேரமைப்பு ஏற்படுத்தியிருப்பதன் தாற்பரியத்தை நான் வரவேற்கின்றேன்.

இதில் இணையத்தளத்தில் சர்வதேச வலைப்பின்னல் ஒன்றை ஏற்படுத்துவது அவசியம். உலகில் வாழும தமிழர்களின் பெயர் முகவரிகளைத் திரட்டுவது இதன் மூலம் ஓர் அரிய பணியாக இருக்கும். இந்த 'முகவரி விபரக்கொத்தை' உருவாக்கி விட்டால் உலகத் தமிழர்களையெலலாம் ஒரே குடும்பம் ஆக்கும் முயற்சி இலகுவாக இருக்கும். இதனை நடைமுறைப்படுத்த இந்த மாநாட்டில் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப் படவேண்டும்.

உலகத் தமிழர்கள் சாதி, சமயம், நாடு,அரசியல் என்ற எல்லைக்கோடுகளைத் தாண்டி ஒன்றுபட்டு நிற்க வேண்டும். இந்த் உணர்வை உலகளாவிய ரீதியில் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

தமிழகத்தைப் பற்றி ஒன்று சொல்லுவதை அவசியமென நான் கருதுகிறேன். தமிழகத்திலுள்ள தமிழ் மக்கள் சைவம், வைணவம், சாக்தம், சமணம், கிறிஸ்தவம், இஸ்லாமியம் என்ற மதங்களினால் பிளவு பட்டிருக்கிறார்கள் என்பது வரல-

### தமிழை வளர்க்க உறுதுணை

ஆனால் இந்த மதங்கள் எதுவுமே தமிழ்மொழியின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்ததில்லை. அதை விட தமிழை வளர்ப்பதற்குத் துணையாக இருந்திருக்கின்றன என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை.

எனவே மதத்தால் வேறுபட்டிருப்பினும் தமிழ் இனத்தால் ஒன்றுபட்டே இருந்திருக்கிறார்கள். ஆனால் தமிழினத்தின் சாபக்கேடாக சாதி முறை அமைந்திருக்கின்றது. அதனை தமிழகம் இன்றும் அங்கீகரித்து வருகின்றது.

சமயங்களினால் ஒன்று சேர்ந்து தமிழர்கள் சாதியினால் ஒன்று சேரமுடியவில்லை என்பதனை தமிழகத் தலைவர்கள் விசேட கவனத்தில் எடுக்க வேண்டும். உலகமெங்கும் பரந்து வாழுகின்ற தமிழர்களில் ஈழத் தமிழர்கள் மட்டுமே தமிழ் மொழிக்காக செயல்படுவதை தங்கள் வாழ்க்கையின் ஒரு அங்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

சுதந்திரமாக செயற்படக்கூடிய தமிழகததை விட யுத்த பூமியிலே வாழுகின்ற எங்களுடைய குழந்தைகளுக்கு தமிழ் உணர்வுகள் அதிகம் இருக்கிறது என்பதை சொல்லுவதல்எனக்கு தயக்கம்கிடையாது என்றார். (உ-121)

---

## 21 அமைச்சர்கள், 21பிரதி அமைச்சர்கள் 3 மாத காலத்தில் வெளிநாடுகளுக்கு விஜயம்

(கொழும்பு)

பாராளுமன்ற நிலையியற் கட்டளைப்படி அரசாங்கம் ஒழுங்கு முறைக்கமைய பாராளுமன்ற அமர்வுகளை நடத்தாததன்காரணமாகப் பல அமைச்சர்கள் அரச செலவில் பல வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்கின்றனர். கிடைத்த தகவல்களின்படி கடந்த 3 மாதங்களில் 21 அமைச்சர்கள் 21 பிரதி அமைச்சர்கள் 21 வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த போது, செலவினங்களைக் கட்டுபடுத்துவதற்காகத் தமது பாராளுமன்ற உறுப்பினர்களோ அல்லது அமைச்சர்களோ, அடிக்கடி வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள மாட்டார்கள் என உறுதி வழங்கியிருந்தது. இத்தவறை ஐ.தே.க அரசாங்கம் செய்திருந்ததாகக் குற்றஞ் சாட்டியும் இருந்தது.

அரசு பதவிக்கு வந்த முதல் மாதத்தில் அமைச்சர்கள் ஜே.செனவிரட்ண,ஜீவன குமாரதுங்க ஆகியோரும் மேயில் மஹிந்த யாப்பா அபே வர்த்தன, அனுரா பண்டாரநாயக்க, ஏ.எச்.எம் பௌசி ஆகியோர் முதல் வாரத்திலும், அடுத்த வாரம் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே, சரத் அமுனுகம, நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரும் மே 19இல் குமார வெல்கம, அனுரகுமார திஸநாயக்க ஆகியோரும் அடுத்த வாரம் டக்ளஸ் தேவானந்தாவும் வெளிநாட்டுப் பயணம் செய்திருந்தனர்.

மே 24இல் மஹிபால ஹேரத் மே 29 இல் விஜித ஹேரத், அத்தாவுட செனவிரட்னவும் மே 30இல் மஹிந்தானந்த அழுத் கமகேயும் ஜூனில அத்தாவுட செனவிரட்ன, பிரதி அமைச்சர் பந்துல பஸ்நாயக்கவும் ஜூனில போயல் அஷரப, டி.எம்.ஜயரட்ன, மில்றோப் பெர்னான்டோவும் அனுராபண்டார நாயக்கவும் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்துள்ளனர்.

இதேவேளை, இம்மாதமும் பெருமளவு அமைச்சர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

(உ-6)

## அமைச்சர்கள் புரியும் ஊழல் மோசடிகளைத் தடுக்க ஏற்பாடு

### பிரதமர் மகிந்த தகவல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகள் மற்றும் வீதிகள் என்பனவற்றை விரைவில் புனரமைக்கப் போவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்ளதுள்ளார்.

நேற்று முன்தினம் திருகோணமலைக்கு விஜயம் செய்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ,கிண்ணியா நீரோடைப் பாலத்தை அமைப்பதற்கான அடிக்கல்லை நாட்டி வைத்து உரையாறறுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாறறுகையில், ஐக்கிய தேசிய முன்னணி அரசின காலத்தில் 3அமைச்சர்கள் செய்த வேலையினை தற்போது ஒரு அமைச்சர் ஊடாக செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால், அமைச்சுக்களுக்கு இடையே இடம்பெறும் ஊழல் மோசடிகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என எதிர்பார்க்கிறேன்.

தென் மாகாணத்தில் உள்ள வீதிகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்தப் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடைந்ததும்,வடக்கு-கிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

இதேவேளை,சமாதான நடவடிக்கைகளையும் அரசு துரிதமாக முனனெடுததுச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது என்றார்.

(உ-60,10)

## சட்டத்தரணிகளின் திறமையை வளர்க்கத் திட்டம் அமுல்

(கொழும்பு)

சட்டத்தரணிகளின் தொழில்சார் திறமையை மேம்படுத்துவதற்காக நாடுதழுவிய திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளதாக பிரதம நீதியரசர் சரத்என்சில்வா தெரிவித்துள்ளார். உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள இந்த செயற்றிட்டத்தின் மூலம் நீதிமன்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் நிவாரணங்களை பெற முடியும். சட்டத்தரணிகளின் அறிவையும் திறமையையும் இந்த செயற்றிட்டம் மேம்படுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(உ-60,10)

## இன்று ஒரு தகவல்

# பேரறிஞர்

ஜவகர்லால் நேருபிரதமராக இருந்த போது ஒரு முறை சென்னைக்கு வந்திருந்தார். அங்கு நடை பெறவிருந்த சிலமுக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகவே வந்திருந்தார். ஆளுநர் மாளிகையில் ஒரு நாள் இரவு தங்கி மறு நாள் புதுடில்லிக்குப் புறப்படுவதாக ஏற்பாட்டு நிகழ்ச்சிகளையெல்லாம் முடித்துக்கொண்டு ஆளுநரின் மாளிகையில் தங்கியிருந்தார்.

அன்றிரவு படிப்பதற்கு அவருக்கு முக்கியமான புத்தகம் தேவைப்பட்டது. அந்த சமயத்தில் உலக அளவில் ஒரு முக்கியமான பொருளாதாரம் சம்பந்தமான புத்தகம் வெளியாகியிருக்கும் விஷயம் அவருக்குத் தெரியும். அந்தப் புத்தகம் சென்னைக்கு வந்திருக்குமா? என்று விசாரித்தார் நேருஜி.

அவர் இப்படிக்கேட்டதும் அங்கே இருந்தவர்கள் எல்லோரும் மிகவும் பரபரப்பாக செயற்பட ஆரம்பித்தார்கள்.முக்கியமான இடங்களில் விசாரித்தார்கள் சென்னையில் உள்ள கன்னிமாரா நூல் நிலையத்திற்கு எப்படியும் அந்தப் புத்தகம் வந்திருக்கும் என்று ஒரு நம்பிக்கை. அங்கே விசாரித்தார்கள்.

அந்தப் புத்தகம் இரண்டு நாட்களுக்கு முன்பு தான் அங்கே வந்திருந்தது. உடனே எல்லோரும் அங்கே ஓடினார்கள். அவர்களுக்கு இன்னுமோர் சந்தேகம். "புத்தகம் வந்திருப்பது சரி. இந்த சமயத்தில் அதை வேறுயாரும் எடுத்துக் கொண்டு போயிருக்கக் கூடாதே இருந்தாலும் மனதிற்குள் ஒரு தைரியம் "இப்படி ஒரு புத்தகம் வெளி வந்து இருக்கும் விசயமே நேருஜி சொல்லித்தான் நமக்கே தெரியும். அதுவுமில்லாமல் உலகப் பொருளாதாரம் சம்பந்தமான ஏதோ ஒரு புத்தகம் அது.

அதைப்போய் இந்த நேரத்தில் அவ்வளவு ஆர்வமாக யாரும் எடுத்துக்கொண்டுபோயிருக்க மாட்டார்கள் என்ற தைரியம் இந்தத் தைரியத்துடன் அந்த நூல் நிலையத்திற்கு ஓடினார்கள். புத்தகத்தை தேடினால் அது கிடைக்கவில்லை.யாரோ எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள்.

நேருவுக்கு மட்டுமே தெரிந்திருந்த அந்தப்புத்தகம் பற்றிய விடயம் சென்னையில் வேறு ஒருவருக்கும் தெரிந்துள்ளது. உடனே எல்லோரும் பரபரப்பாக பதிவேட்டைப் புரட்டினார்கள். எடுத்துக்கொண்டு சொன்றவர்கள் அதில் கையெழுத்துப் போட்டிருப்பார்கள் அல்லவா? அதைப்பார்த்து யார் என்று தெரிந்து கொள்வற்காக.

அதோ அந்தப் புத்தகத்தின் பெயர் பக்கத்தில் அதை எடுத்துக்கொண்டுபோனவரின் கையெழுத்து. உற்றுப் பார்த்தால் அதில் சி.என். அண்ணாத்துரை என்று எழுதியிருந்தது. அவர் தான் பேரறிஞர் அண்ணா நேரு படிக்க விரும்பிய ஒரு புத்தகத்தை அதே நேரம் படிக்க விரும்பிய இன்னொரு தலைவர் இவர்.

படிப்பதில் அவருக்கிருந்த ஆர்வத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அதற்கு எவ்வளவோ சம்பவங்கள் உள்ளன. கடைசிக் காலத்தில் அவர் அடையாறு மருத்துவமனையில் படுத்திருக்கிறார். அவருக்கு அவசரமாக ஒரு முக்கியமான அறுவைச் சிகிச்சை செய்யவேண்டியிருந்தது.

அமெரிக்காவில் இருந்து டாக்டர் மில்லர் வந்தார். அவரிடம் அண்ணா கேட்டார் "டாக்டர் நாளைக்கே அறுவைச் சிகிச்சை செய்யப் போகிறீர்களா?" என்று. "ஆமாம்" என்றார் டாக்டர் மில்லர். "நாளை மறுநாள் செய்கிறேன் என்றார் அண்ணா. "ஏன்... ஏதாவது நாள் பார்க்கிறீர்களா? " என்று கேட்டார் டாக்டர். "இல்லை ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறேன் அதை நாளைக்குள்ளே முடித்துவிடுவேன். அதன் பின் நான் இறந்தாலும் கவலை இல்லை" என்றார்.

சங்ககால நூல்களிலிருந்து சமீபத்து நூல்கள் வரை அவர் எல்லாம் படித்திருக்கிறார். ஒரு திருமண விழாவில் அவர் பேசும் போது சொன்ன விஷயம் இது. "சங்க காலத்தில் காதலியை மணக்க விரும்புபவனுக்கு அவளது தந்தை வீரச் சோதனைகள் எல்லாம் வைப்பார். "போய் புலிப்பல் கொண்டுவா அப்போது தான் என் பெண்ணைத் தருவேன்"என்பார். காதலன் உடனே காட்டுக்குப்போய் ஒரு புலியைக் கொன்று அதன் பல்லைக் கொண்டு வருவான்.அதை வீரப் பதக்கத்தில் பதித்து அவனுக்கு மாமனார் கல்யாண சமயத்தில் சூட்டுவார். இப்போதெல்லாம் காதலனிடம் "காட்டுக்குப் போய்புலிப்பல்கொண்டுவா" என்று சொன்னால் புலிதான் மாப்பிள்ளையாக வரும் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

---

## தலைநகர் வரை பரவிவிட்ட

# உள்வீட்டுப் பழிவாங்கல்களைப் பார்த்து வாழாவிருக்க முடியாது

## சீறுகிறார் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தோன்றிய பிரச்சினை தற்போழுது கொழும்பு வரை வந்துவிட்டது. இதனைப் பார்த்துக்கொண்டு எம்மால் சும்மா இருக்கமுடியாது.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ண சிறி விக்கிரம நாயக்க இவ்வாறு சீற்றம் வெளியிட்டுள்ளார்.

பிரதமர் இது பற்றி மேலும் கருத்து வெளியிடுகையில்,

கிழக்கு மாகாணத்தின் பிரச்சினைகளுக்கெல்லாம் காரணமாக இருந்த குழு ஒன்றின் உட்பூசலே கொழும்பு கொட்டாவே மாலவே அத்துருகிரியவில் இடம் பெற்ற கொலைச் சம்பவங்களுக்குக் காரணம்.

இதனால் நகரின்பாதுகாப்பு நிலைமைகளுக்கு எந்த விதத்திலும் அச்சுறுத்தல் ஏற்படவில்லை.

எனினும்,இக் கொலைச் சம்பவத்திற்கு எதிராக அரசாங்கம் சட்டநடவடிக்கைகளை எடுக்கும். இப்பிரச்சினை ஒரே குடும்பத்துள் ஏற்பட்டிருப்பினும் இதனை சும்மா விட்டு விடமுடியாது.

காரணம் கிழக்கின் பாதுகாப்புகளுக்கு அச்சுறுத்தலாக இருந்த குழுவின் விவகாரமே இது என்பதால் கொழும்பு பாதுகாப்பு நிலைமைகளை உறுதி செய்யும் பொருட்டு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (உ-4,64)

---

# பெற்றோலின் விலை ஏற்றம் சாதாரண மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது

## பேராசிரியர் பீரிஸ் குரல்

(கொழும்பு)

பெற்றோலின் விலை 8 ரூபாவால் அதிகரித்துள்ளமையினால் சாதாரணமக்கள் பெரும்பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியில் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீ.எல்.பீரிஸ் கவலை தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், சொகுசு வாழ்க்கை வாழ்வோருக்கு பெற்றோலின் விலை அதிகரிப்பால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

ஆனால், அன்றாடப் பிழைப்புக்காக ஆட்டோ வண்டி செலுத்தும் 2 லட்சத்துக்கு மேற்பட்டவர்களும் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மோட்டார் வண்டி செலுத்துபவர்களுமே பெற்றோலின் விலை அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



இது ஒரு புறமிருக்க தேர்தல் ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கான சட்ட மூலம் அங்கீகரிக்கப்பட்டு 2 ஆண்டுகள் கடந்துள்ள போதும் ஆணைக்குழு ஒன்று இதுவரை நியமிக்கப்படவில்லை.

இதனால் மக்கள் சுதந்திரமான முறையில் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் விசேட சட்ட மூலம் ஒன்றை பாராளுமன்றில் சமர்பிக்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருகின்றது என்று தெரிவித்துள்ளார். (உ-61,10)

---

## இராசி பலன்

27.07.2004

(ஆடி 12, செவ்வாய்க்கிழமை)

தசமி பி.ப.12.20மணி வரை

அனுசம் மு.இ. 11.00 மணி வரை

இராகுகாலம் 3.02-4.32 மணி வரை

சுபநேரம் 10.32-12.02

2 வது ஆடிச் செவ்வாய்

**மேடம்**
மனக்கிலேசம், காரிய தடங்கல், வாகன பயம், தொழிலில் மந்த நிலை

**இடபம்**
எடுத்த காரியம் கைகூடும், தெய்வ சிந்தை, குடும்ப நலம், கீர்த்தி

**மிதுனம்**
சத்துரு ஜெயம், செய்தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி, நல்ல சம்பவம்.

**கடகம்**
சிறுவியாதி, வாக்கு மேன்மை, எடுத்த கருமங்கள் தாமதமாகும், மனஸ்தாபம்.

**சிங்கம்**
ரோகபயம், சிந்தனை மிகுதி, புதிய விடயம், முயற்சி தாமதம்.

**கன்னி**
பிரயாண நன்மை, கூட்டு முயற்சி, நல்ல வருமானம், போசன சுகம்.

**துலாம்**
கடின வார்த்தை, பெருமையடைதல், வேலைப் பளு, முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
நல்ல முயற்சி, நண்பர்கள் உதவி, சயன சுகம், மன மகிழ்ச்சி.

**தனுசு**
பிதா சிந்தை, காரிய அலைச்சல், அதிக செலவு, உறவினர் மனஸ்தாபம்.

**மகரம்**
தொழில் சிந்தை, பொருள் சேர்க்கை, பெருமையடைதல், மன மகிழ்ச்சி.

**கும்பம்**
கடின உழைப்பு, நல்ல செய்தி, அதிகாரம், உறவினர் சந்திப்பு.

**மீனம்**
உடல் உழைப்பு, புதிய சிந்தை, உடல் நலக் குறைவு, அச்சமான நிலை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

---

# கூட்டமைப்பு எம்.பிக்களுடன் ஜனாதிபதி விரைவில் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரைவில் சந்திக்கவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது பற்றிய விடயங்கள் குறித்தே தமிழ்த் தேசியப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி விரிவாகக் கலந்துரையாடவுள்ளார். அத்துடன் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப்பணிகள் குறித்தும் ஜனாதிபதி அவர்களுடன் கலந்துரையாடவிருக்கின்றார். அடுத்த மாதம் முதல் வாரம் இச்சந்திப்பு இடம் பெறவிருக்கின்றது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-121,4)

---

# இடநெருக்கடியை எதிர்நோக்கும் இந்து கலாசார அமைச்சு

(கொழும்பு)

உல்லாசப் பயணத்துறை அமைச்சு இயங்கி வரும் கட்டடத் தொகுதியில் டக்ளஸ் தேவானந்தாவின் இந்து கலாசார அமைச்சுக்கு இடம் வழங்கப்பட்டமை தொடர்பாக அக்கட்டடத்தின் உரிமையாளர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது காரியாலயத்தை அனுரா பண்டாரநாயக்கவின் அமைச்சுக் கட்டடத்திற்கு மாற்றியதன் காரணமாகவே இப்பிரச்சினை எழுந்துள்ளது.

உல்லாசப் பயணத்துறைக்கு மாத்திரமே அனுமதிக்கப்பட்டுள்ள தனது கட்டடத் தொகுதியில் இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சுக்கு இடம் வழங்கப்பட்டமை காரணமாக, தனது கட்டடத் தொகுதிக்கு கடுமையான பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கட்டட உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இவ்விகாரம் அக்கட்டடத்தை வாடகைக்குப் பெறுவது தொடர்பாக தனக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மீறும் செயலெனவும் சுட்டிக்காட்டியுள்ள கட்டட உரிமையாளர், குறித்த கட்டடத் தொகுதியில் இருந்து உல்லாசப் பயணத்துறை அமைச்சு வெளியேறிச் செல்லுமாறும் உல்லாசப் பயணத்துறை அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (உ-121)

# உடுவில் கல்விக் கோட்ட ஆங்கிலப் போட்டி முடிவுகள்

(இணுவில்)

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே அண்மையில் நடத்தப்பட்ட ஆங்கில தினப்போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.மேற்படி போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விபரம் வருமாறு:

**மனனம் (தரம்-3)**

ம.ஹம்சாந்தி - உடுவில் மகளிர் கல்லூரி
சி.தேனுஜா - உடுவில் மகளிர் கல்லூரி
சி.தனுஜிகா - ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை

**(தரம்-4)**

சு.டிலன்ஷிகா - உடுவில் மகளிர் கல்லூரி
இ.அச்சுதன் - உடுவில் மகளிர் கல்லூரி
ம.மதுஷா - இராமநாதன் கல்லூரி
க.தீபிகா - இணுவில் ம.கல்லூரி
செ.தக்ஷாயினி - ஏழாலைதெற்கு அமி.தகபாடசாலை

**(தரம்-5)**

லோ.பவதினி - உடுவில் மகளிர் கல்லூரி
சி.பிரதக்ஷனா - உடுவில் மகளிர் கல்லூரி
க.ஹம்ஷாநந்தி - உடுவில் மகளிர் கல்லூரி

**(தரம்-6)**

சி.சாம்பவி - உடுவில் மகளிர் கல்லூரி
தே.டிலுக்ஷி - உடுவில் மகளிர் கல்லூரி
தெ.கௌசியா - இராமநாதன் கல்லூரி

**(தரம்-7)**

இ.கிறிஸ்ரின் தபிதா - உடுவில் மகளிர் கல்லூரி
சோ.சாந்தி - உடுவில் மகளிர் கல்லூரி
ச.சக்திபாலன் - ஸ்கந்தரோதயா கல்லூரி

**(தரம்-8)**

ஜெ.ஜெயரிதா - உடுவில் மகளிர் கல்லூரி
ம.தனியா - உடுவில் மகளிர் கல்லூரி
ஜெ.டென்சிகா - உடுவில் மகளிர் கல்லூரி

**(தரம்-9)**

உ.சகீானா - உடுவில் மகளிர் கல்லூரி
ஜெ.துளசிகா - ஸ்கந்தரோதயா கல்லூரி
தெ.லிண்டா - உடுவில் மகளிர் கல்லூரி
ச.தமிழினி - உடுவில் மகளிர் கல்லூரி
இ.இவஞ்சலீன் - உடுவில் மகளிர் கல்லூரி
ச.அஜிதா - இராமநாதன் கல்லூரி
நா.மயூரா - உடுவில் மகளிர் கல்லூரி
சி.வேணுகா - இராமநாதன் கல்லூரி
ப.ஜோர்டினா - உடுவில் மகளிர் கல்லூரி

**பார்த்து எழுதுதல் (தரம்-3)**

இ.நிஷானா - உடுவில் மகளிர் கல்லூரி
தி.பிரசாத் - ஏழாலை தெறகு சிவசன்மார்க்கவித்தி
க.மதுரகா - சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தி

**(தரம்-4)**

சி.சிவகஷிகா - உடுவில் மகளிர் கல்லூரி
ப.கிரிஜா - சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தி
கு.இந்துஜா - இணுவில் மத்திய கல்லூரி

**(தரம்-5)**

இ.பிரியங்கா - ஏழாலை தெற்கு மகாவித்தியாலயம்
செ.சங்கீதனா - சுன்னாகம் நாகேஸ்வரி வி.சாலை
கி.கோகுலவதனி - இணுவில் மத்திய கல்லூரி

**(தரம்-6)**

இ.நிலானி - உடுவில் மகளிர் கல்லூரி
செ.தக்ஷாயினி - ஸ்கந்தரோதயா கல்லூரி
த.சரண்யா - ஸ்கந்தரோதயா கல்லூரி

**(தரம்-7)**

கா.பிரியங்கா - உடுவில் மகளிர் கல்லூரி
செ.சங்கீதா - ஸ்கந்தரோதயா கல்லூரி
பா.அஞ்சனா - உடுவில் மகளிர் கல்லூரி

**(தரம்-8)**

பி.லக்ஷி - உடுவில் மகளிர் கல்லூரி
ம.மொபிகா - உடுவில் மகளிர் கல்லூரி
ச.சக்திதாஜினி - ஸ்கந்தரோதயா கல்லூரி

**(தரம்-9)**

தே.டிலானி - உடுவில் மகளிர் கல்லூரி
ச.விதுஷா - உடுவில் மகளிர் கல்லூரி
க.நிஷாந்த் - ஸ்கந்தரோதயா கல்லூரி

**(தரம்-10)**

அ.அபிதா - உடுவில் மகளிர் கல்லூரி
த.அகல்யா - ஸ்கந்தரோதயா கல்லூரி
வீ.இமாஜினி - ஸ்கந்தரோதயா கல்லூரி

**(தரம்-11)**

ச.தக்ஷீலா - ஸ்கந்தரோதயா கல்லூரி
க.ராகுலவரணி - உடுவில் மகளிர் கல்லூரி
ச.டலறீன் - உடுவில் மகளிர் கல்லூரி

**(தரம்-12)**

சி.சிவீநிஷா - உடுவில் மகளிர் கல்லூரி
வே.மீரா - ஸ்கந்தரோதயா கல்லூரி
சு.ஆர்த்திகா - உடுவில் மகளிர் கல்லூரி

**(தரம்-13)**

க.பகீரதி - ஸ்கந்தரோதயா கல்லூரி
தி.தர்ஷினி - ஸ்கந்தரோதயா கல்லூரி
க.வசீகரி - உடுவில் மகளிர் கல்லூரி

**ஆக்கத்திறன் (தரம்-6)**

இ.நீதன் - இணுவில் இந்துக்கல்லூரி
செ.தக்ஷாஜினி - ஸ்கந்தரோதயா கல்லூரி
ப.லக்ஷி - ஸ்கந்தரோதயா கல்லூரி

**(தரம்-7)**

சோ.சாந்தி - உடுவில் மகளிர் கல்லூரி
இ.சக்தியா - உடுவில் மகளிர் கல்லூரி
வி.சுகன்யா - இணுவில் இந்துக்கல்லூரி

**(தரம்-8)**

சி.மாதுமை - ஸ்கந்தரோதயா கல்லூரி
இ.விகுஷா - உடுவில் மகளிர் கல்லூரி
பா.ஷாலினி - உடுவில் மகளிர் கல்லூரி

**(தரம்-9)**

த.வைஷனா - ஸ்கந்தரோதயா கல்லூரி
இ.தனுஜா - உடுவில் மகளிர் கல்லூரி
தே.டிலானி - உடுவில் மகளிர் கல்லூரி

**(தரம்-10)**

அ.ரேகா - ஸ்கந்தரோதயா கல்லூரி
ம.திவ்யா - இணுவில் இந்துக் கல்லூரி
செ.சாம்பவி - கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தி.

**(தரம்-11)**

ப.ஜோர்டினா - உடுவில் மகளிர் கல்லூரி
இ.நீரஜா - இராமநாதன் கல்லூரி
இ.கிருஷ்ணராஜ் - இணுவில் மத்திய கல்லூரி

**(தரம்-12)**

தி.அதிலா - உடுவில் மகளிர் கல்லூரி
பா.சனாதனி - இணுவில் இந்துக் கல்லூரி
அ.ரியோப்பிலா - உடுவில் மகளிர் கல்லூரி

**(தரம்-13)**

க.கலையரசி - ஸ்கந்தரோதயா கல்லூரி
பா.கார்த்திகா - உடுவில் மகளிர் கல்லூரி
பா.சிந்துஜா - உடுவில் மகளிர் கல்லூரி

**பேச்சுத்திறன்(ஆயத்தமில்லாமல்) (தரம்-13)**

க.கலையரசி - ஸ்கந்தரோதயா கல்லூரி
ம.ஆதவன் - ஸ்கந்தரோதயா கல்லூரி

**பேச்சுத்திறன்(ஆயத்தமாக) (தரம்-12)**

சு.தாருணி - உடுவில் மகளிர் கல்லூரி
தி.ஜனனி - உடுவில் மகளிர் கல்லூரி
ந.மேனகா - உடுவில் மகளிர் கல்லூரி
இ.சுகனியா - உடுவில் மகளிர் கல்லூரி

**பாடல் (குழு நிகழ்ச்சி) (ஆரம்பப்பிரிவு)**

உடுவில் மகளிர் கல்லூரி
உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்
சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலை

**(கனிஷ்ட (பி) பிரிவு)**

மயிலணி சைவ ம.வித்தியாலயம்

**(கனிஷ்ட (ஜி) பிரிவு)**

உடுவில் மகளிர் கல்லூரி
மயிலணி சைவ ம.வித்தியாலயம்

**(சிரேஷ்ட (ஜி) பிரிவு)**

உடுவில் மகளிர் கல்லூரி

**நாடகம்-குழு நிகழ்ச்சி (ஆரம்பப்பிரிவு)**

உடுவில் மகளிர் கல்லூரி

**(கனிஷ்ட பிரிவு)**

உடுவில் மகளிர் கல்லூரி

**(சிரேஷ்ட பிரிவு-பேச்சு)**

உடுவில் மகளிர் கல்லூரி

**(சிரேஷ்ட பிரிவு-பாடல்)**

உடுவில் மகளிர் கல்லூரி

**சொல்வதெழுதுதல் (தரம்-6)**

ம.சரண்யா - உடுவில் மகளிர் கல்லூரி
இ.நீதன் - இணுவில் இந்துக் கல்லூரி
செ.ஆரணி - உடுவில் மகளிர் கல்லூரி

**(தரம்-7)**

ஆ.ஜெயப்பிரகாஷ் - ஸ்கந்தரோதயா கல்லூரி
இ.கிறிஸ்ரின் தபிதா - உடுவில் மகளிர் கல்லூரி
ச.அனிதா - உடுவில் மகளிர் கல்லூரி

**(தரம்-8)**

இ.விதுஜா - உடுவில் மகளிர் கல்லூரி
ச.சக்திதாஜினி - ஸ்கந்தரோதயா கல்லூரி
பி.லக்ஷி - உடுவில் மகளிர் கல்லூரி
சி.மாதுமை - ஸ்கந்தரோதயா கல்லூரி

**(தரம்-9)**

இ.தனுஜா - உடுவில் மகளிர் கல்லூரி
த.வைஷனா - ஸ்கந்தரோதயா கல்லூரி
உ.ஷகானா - உடுவில் மகளிர் கல்லூரி

**(தரம்-10)**

பா.லக்ஷனா - இணுவில் இந்துக் கல்லூரி
அ.சர்மிளா - இராமநாதன் கல்லூரி
சீ.துஷாந்தி - இராமநாதன் கல்லூரி
கு.கீதினி - உடுவில் மகளிர் கல்லூரி
ந.சரணியா - உடுவில் மகளிர் கல்லூரி

**(தரம்-11)**

பா.கல்பனா - உடுவில் மகளிர் கல்லூரி
செ.ஜனகா - ஸ்கந்தரோதயா கல்லூரி
சி.வினுஜா - இராமநாதன் கல்லூரி

**(தரம்-12)**

தி.அதிலா - உடுவில் மகளிர் கல்லூரி
தி.காயத்திரி - உடுவில் மகளிர் கல்லூரி
சி.லகிதா - இணுவில் இந்துக் கல்லூரி

**(தரம்-13)**

கு.கஜந்தா - உடுவில் மகளிர் கல்லூரி
சொ.ஹர்சினி - உடுவில் மகளிர் கல்லூரி
ந.வசுமதி - இராமநாதன் கல்லூரி

(உ-122)

# அல்பிரட் துரையப்பாவின் 29வது சிரார்த்த தினம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளரும் மேயரும்,யாழ்ப்பாணம் தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் அல்பிரட் துரையப்பாவின் 29 ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள் இன்று செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணிக்கு அவரது நினைவிடத்தில் நடைபெறவுள்ளன.

கட்சியின் இணைச் செயலாளரும்,பிரதி அமைப்பாளருமான த.தேவகுலநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள், மத்திய குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-18)

# கருணாவுடன் எமக்கு எவ்வித தொடர்பும் கிடையாது

## மறுக்கிறது அமெ. தூதரகம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விலக்கப்பட்டிருக்கும் கருணாவுடன் எந்தத் தொடர்புகளும் தமக்குக் கிடையாது என அமெரிக்கத் தூதுவராலயம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்காக,கருணாவை அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் சிங்கப்பூருக்கு அழைத்திருப்பதாக ஊடகங்களில் வெளியான செய்தி குறித்தே அமெரிக்கத் தூதரகம் இவ்வாறு மறுப்பு வெளியிட்டுள்ளது.

வெளியான இச்செய்தி முற்றிலும் தவறானது. தூதுவராலய அதிகாரிகளோ அல்லது அமெரிக்கத் தூதுவராலயமோ கருணாவுடன் தொடர்புகள் எதையும் கொண்டிருக்கவில்லை என்று மேலும் அமெரிக்கத் தூதுவராலயம சுட்டிககாட்டியுள்ளது. (உ-121)

# ஜாதிகஹெல உறுமய முன்வைத்த மதமாற்ற தடைச் சட்டமூலம் வாபஸ்

ஜாதிகஹெல உறுமய முன்வைத்த மதமாற்றச் சட்டமூலம் வாபஸ் பெறப்படவுள்ளதுடன், இந்துக்களின் யோசனைகளையும் உள்ளடக்கியதான புதிய சட்டமூலமொன்றும் விரைவில் தயாரிக்கப்படவுள்ளது.

அரசியலில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள இம் மதமாற்றத் தடைச்சட்டமூலம் குறித்துத் தற்போது உயர் நீதி மன்றம் பரிசீலித்துவரும் இந்நிலையில், கத்தோலிக்க அமைப்புக்கள் பலவும் இதற்கு எதிராகக் குரல்எழுப்பி வருகின்றன.

பௌத்த மதங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் ஏனைய மதங்களுக்கு மாறுவதைத் தடைசெய்யும் வகையிலேயே இம் மதமாற்றத் தடைச்சட்டமூலம் முன்வைக்கப்பட்டது. இந்நிலையினை மாற்றி இந்து மதத்தவர்களின் பிரச்சினைகளையும் உள்ளடக்கிய வகையில் புதிய சட்டமூலமொன்றை உருவாக்கும் நோக்கிலேலே மேற்படி சட்டமூலம் வாபஸ் பெறப்படவுள்ளது. (உ-18)



உள்ளூராட்சி வாரத்தையொட்டி பருத்தித்துறை பிரதேச சபையினால் ஆரம்பிக்கப்பட்ட மரம் நாட்டு இயக்க ஆரம்ப விழாவில்,புலோலி ப.நோ.கூ.சங்க இயக்குநர் சபைத் தலைவர் டாக்டர் எஸ்.திருச்செல்வநாயகம் மற்றும் கமநல சேவைத் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.உருத்திரேஸ்வரன் ஆகியோர் மரக்கன்றுகளை நாட்டி வைப்பதைப் படத்தில் காணலாம்.



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் நூலகம் என்பன அண்மையில் வடமராட்சி வயலக்கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தனத்தினால் திறந்து வைக்கப்பட்டன. இவருடன் இந்நிகழ்வில் கலந்து கொண்ட கல்லூரி அதிபர் எஸ். நடராஜா,கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.அம்பலவாணர் மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். அருளானந்தம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். படங்கள்:-பரு.நிருபர்

## சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் புலிகளுக்கு நிகர் புலிகளே

# பிரபாகரன் அரசியலுக்கு வந்தால் அவரை ஆதரிக்கத் தயங்கோம்

## சிங்கள மக்கள் பலர் கருத்து

(கொழும்பு)

**பலதரப்பட்ட தென்னிலங்கைப் பெருபான்மையின மக்களை சந்தித்த தென்னிலங்கைப் பத்திரிகையொன்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும், அவரது கட்சியும் அரசியல் நீரோட்டத்திற்குள் வந்தால், அவர்களுக்கு நீங்கள் வாக்களிப்பீர்களா என்ற கேள்வியைக் கேட்டபோது, பிரபாகரனுக்கு வாக்களிக்கும் எண்ணம் தமக்கு உள்ளது என அவர்களில் பெரும்பாலானவர்கள் தெரிவித்துள்ளனர்.**

இதற்கான காரணத்தை வினவிய போது,

அவர் கடுமையான ஆட்சியாளராக உள்ளபோதும், நாட்டின் ஒழுங்கையும சட்டத்தையும் நிலை நாட்டுவதில் வல்லவராகத்திகழ்கிறார். அதற்காக அவருக்கு வாக்களிக்க லாம் என்று தெரிவித்தனர்.

இதுபற்றி மேலும் கருத்துக் கூறிய சிங்கள மக்கள்,

"ஜே.வி.பிக்கு நாம் வாக்களிக்கின்றோம் என்றால் பிரபாகரனுக்கு வாக்களிப்பதில் எதுவித தவறும் இல்லை.

புலிகள் ஒழுங்கானவர்கள், நன்றாக நெறிப்படுத்தப்பட்டவர்கள்பெரும்பாலான அரசியல் வாதிகளைவிட தமது இலக்கை அடைய அர்ப் பணிப்புடன் செயற்படுபவர்கள்.

சிங்களக் கட்சிகள் தூரநோக்கற்றவை, நன்றாக நிர்வகிக்கப்படாதவை, சகல கட்சிகளும்பாராளுமன்றத்திற்கு வந்து பலகொலைகளைப் புரிகின்றன.

புலிகள் பாராளுமன்றத்திற்கு வரமுடியாது என்பதற்கு எந்தவித காரணங்களும் இல்லை.

புலிகள் நல்லொழுக்கம், கட்டுப்பாடுடையவர்கள். சிறந்த நிர் வாகத் திறன் உடையவர்கள். அவர்கள்சிறந்த அமைப்பாக உள்ளதால், சிறப்பாகச் சட்டங்களை அமுல்படுத்து வதால் திட்டவட்டமாக இந்த நாட்டுக்குத்தேவையான சட்டங்களைக் கொண்டு வந்து வன்முறைகளைக் கடடுப்படுத்தும் திறமை அவ்களுக்கு மட்டுமே உள்ளது.



எனவே அவர்களுக்கு நிச்சயமாக நாம் வாக்களிப்போம்" எனத் தெரிவித்துள்ளனர். (உ-6)

## பட்டதாரிகளுக்கு அடுத்தவாரம் முதல் கட்டம் கட்டமாக வேலை வாய்ப்பு

### 15ஆயிரம் பேர் உடனடியாக உள்ளீர்ப்பு

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அடுத்தவாரம் முதல் வேலை வாய்ப்பைப் பெறறுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதிநிதியமைச்சர் றஞ்சித் சியம் பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

முதல்கட்டமாக சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், இளைஞர் விவகாரம் மற்றும் காணி ஆகிய அமைச்சுக்களில் உள்ள 15ஆயிரம் வெற்றிடங்கள் நிரப்பப் படவுள்ளது.

இதனால், 15ஆயிரம் பேர் உடனடியாக வேலைவாய்ப்பைப் பெறுவார்கள்.

இரண்டாம் கட்டமாக 12ஆயிரம் பேருககு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படும்.

கலவி அமைச்சில் நிலவும் ஆசிரியர், நூலக பொறுப்பாளர் உட்பட 12ஆயிரம் வெற்றிடங்கள் இரண்டாம் கட்டத்தில் நிரப்பப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(உ-61,10)

## மாறுவேடம் பூண்ட இந்திய உளவு பிரிவினர் வடகிழக்கில் நடமாட்டம்

இந்தியாவின் மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் ஊடுருவி களநிலைமைகளை ஆராய்ந்து வருவதர்க தெரிவிரிக்கப்படுகிறது.

தற்போதைய அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் குறிப்பாக யாழ். மாவட்டத்தையும் கொழும்பையும் மையப்படுத்தி தகவல்களைச் சேகரித்து வந்த இவர்கள், தற்போது இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம, இலங்கையில் தோன்றியுள்ள நெருக்கடிநிலை; அமெரிக்காவின் இலங்கை மீதான ஈடுபாடு என்பவற்றை அடுத்து, கூடிய கரிசனையுடன் உத்தியோகப்பற்றற்ற முறையில் வடக்கு - கிழக்குப் பகுதியில தமது புலனாய்வு நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

கூடுதலாக வியாபாரிகள் போன்றே இவர்கள் வடக்கு - கிழக்குப் பகுதிகளுள் ஊடுருவி சமூகத்தின் உயர் மட்டம், நடுத்தர வர்க்கம், கீழ் மட்டங்களில் உள்ள மக்களை சந்தித்து தகவல்களை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, உண்மையான வியாபார நோக்கில் குடாநாட்டிற்கு வரும் இந்திய வர்த்தகர்களிலும் பார்க்க இவர்கள் பொருட்களை மலிவான விலையில் விற்று வருகின்றனர்.

அமெரிக்க இராணுவ புலனாயவுத்துறையினர் இராணுவ வட்டாரங்களுடன் மட்டுமே கூடுதலான தொடர்பை ஏற்படுத்த முற்பட்டு வரும் சூழலல் இவர்கள் சமூக மட்டத்தில் ஊடுருவி தகவல்களை அறிந்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

(உ-121)

## இலங்கை எதிர்நோக்கும் மற்றுமோர் சவால்

(கொழும்பு)

கடலரிப்பின் காரணமாக இலங்கையின் கடற்கரையில் வருடாந்தம் 0.3மீற்றர் அரிப்பு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து கரையோரங்களைப் பாதுகாப்பதற்காக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதிகமாக மண் அகழப்படும் கரையோரங்களில் வருடமொன்றிற்கு 8-10 மீற்றர் அரிக்கப்படுகிறது இதற்கென கரையோரங்களில் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தேவைப்படுகிறது. பெருமளவு மணல் அகழப்படுவது கட்டடத் தொழிலுக்காகவே. வருடம்தோறும் 8மில்லியன் சதுர மீற்றர் மணல், கட்டடத் தேவைகளுக்குத் தேவைப் படுகிறது. இதில் 50வீதம் மேல் மாகாண தேவைகளுக்கே பயன் படுகிறது.

இவ்வாறான கடலரிப்பில் அதிகமாக வடமேல் மாகாணத்தின் முந்தல்,கற்பிட்டி ஆகிய இடங்கள் பாதிககப்பட்டுள்ளன. தொடர்ச்சி யான மணல அகழ்வானது இலங் கையின் கரையோரங்களின் சூழற் தொகுதிகளை பாதிக்கும் என சூழலியலாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

சிக்கலான சூழற்தொகுதிகள் றேகாவஉஸ்லஸ்கொட ,கலமெட்டிய கடற்கரைகளில் உள்ளன. ஏனெனில், இங்கு ஆமை வளர்ப்பிடங்கள், கடநீரேரிகள், கண்டல்கள், பறவைகள தங்கு மிடங்கள் என்பன உண்டு. இங்கு எதிர்நோக்கும் முக்கிய பிராச்சினை வறுமை. இதனாலேயே பொது மக்கள் மணல் அகழ்வினை தொழிலாகக் கொண்டுள்ளனர்.

(உ-6)




பொதுஜன நூலக கேட்போர் கூடத்தில் ந.செல்வராஜா அவர்களின் "நூல் தேட்டம்" என்ற நூலின் அறிமுக விழாவில் மூதறிஞர் சொக்கன் ஆய்வுரை வழங்குவதையும் நூலின் முதற் பிரதியை வணக்கத்துக்குரிய ஆயர் கலாநிதி ஜெபநேசன், நூல் ஆசிரியர் ந. செல்வராஜாவிடம் பெறுவதையும் இவ் விழாவில் கலந்துகொண்டோர் ஒருபகுதியினரையும் காணலாம். படங்கள்: அலுவலக நிருபர்

# 13 ஈராக் ஆயுததாரிகள் பு.்.ரிஸ் நகரில் மரணம்

(பு.்.ரிஸ்)

ஈராக்கின் பு.்.ரிஸ் ஈராக் படைகளுக்கும் ஆயுததாரிகளுக்குமிடையில் இடம்பெற்ற சண்டையில் 13 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதுடன், சிறுவன் ஒருவன் சிறு காயங்களுக்குள்ளாக நேரிட்டது.







அமெரிக்கப்படையினரின் துணையுடன் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட ஈராக்கின் உள்ளூர்க்காவல் படையினர் மீது தாக்குதல் மேற்கொண்ட ஆயுததாரிகளுக்கெதிராய் படையினர் மேற்கொண்ட கடும் துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈராக்கிற்குத் தெற்கே 35 மைல் தொலைவிலிருக்கும் பு.்.ரிஸ் நகரில் தேடுதல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் தீவிரவாதிகள் மோட்டார் மற்றும் சிறு பீரங்கிகள் கொண்டு படையினரைத் தாக்கத்தொடங்கினர்.

தேடுதல் நடவடிக்கையின் பொழுது பெருந்தொகையான ஆயுதங்களும், வெடிபொருட்களும் ஙீடையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அமெரிக்கக் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (யே)

# சூடான் சமாதானப் பேச்சுக்களை நடாத்துவதில் சிக்கல்நிலை!

(கார்ட்டூம்)

ஐக்கிய நாடுகள் தலைமையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் சூடானில் இடம்பெறுவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. தீவிரவாத இயக்கமொன்றின் தலைவர் கருத்து வெளியிடு







கையில், அரபு ஆயுததாரிகள் டார்.்.பர் நகரிலிருந்து முற்றாக வெளியேற்றப்பட்டாலொழியத் தாம் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளப்போவதில்லை என்று அவர் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்.


அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் சூடான் அரசு டார்.்.பர் பிரதேசத்தில் மேற்கொண்ட இனஅழிப்பு, சூறையாடல், கற்பழிப்புபோன்ற கொடூரங்களுக்கெதிராக் கடும் எச்சரிக்கை விடுத்ததையடுத்து கார்ட்டூம் அரசாங்கம் தனது அட்டூழியங்களை நிறுத்தியது.

இப்பொழுதும்கூட மில்லியன் கணக்கில் தங்கள் இடங்களை விட்டு வெளியேறியுள்ள அகதிகளது பாதுகாப்பை உறுதிசெய்யுமுகமாக ஐ.நா. சமாதானப்படை ஒன்றை அனுப்பும் முயற்சியும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (யே)

# செனட்டர் கெரிக்கும் புஷ்ஷூக்கும் இடையில் கடுமையான போட்டி

(பொஸ்ரன்)

நேற்று நடைபெற்ற ஜனநாயகக்கட்சியின் வருடாந்த மாநாட்டில் கலந்துகொள்ள செனட்டர் ஜோண் கெரி, பொஸ்டனுக்குச் செல்ல முன்பு வெளியிடப்பட்ட கருத்துக் கணிப்பொன்றில் ஜனாதிபதி புஷ்ஷூக்கும் அவருக்குமிடையில் கடும்போட்டி நில்வுவது அவதானிக்கப்பட்டது.




முன்னதாக ரெட் சொக்ஸ் அணிக்கும் நியூயோர்க் யங்கிஸ் அணிக்கு மிடையிலான பேஸ் போலர். போட்டியொன்றில் அவர் கலந்துகொண்டார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் அமெரிக்காவில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் செனட்டர் ஜோண் கெரியும், ரிப்பப் பிளிக்கன் கட்சியின் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷூம் சூறாவளிச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு மாநிலங்களில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டுவருகின்றனர்.

மத்திய கிழக்குப் பிரச்சினைகளில் அமெரிக்காவின் நிலைப்பாட்டைக் கடுமையாகச் சாடிவரும் செனட்டர் கெரி ஜோர்ஜ் புஷ்ஷின் செல்வாக்கில் குறிப்பிட்டளவு சரிவை ஏற்படுத்தியுள்ளதைக் கருத்துக் கணிப்புக்கள் அவ்வப்போது காண்பித்துவருகின்றன.

(யே)

# சிங்கப்பூர் அரசாங்கத்தின் அமைச்சரவை அறிவிக்கப்படும்?

## சண்முகரட்ணம் நிதியமைச்சர்?

(சிங்கப்பூர்)

எதிர்வரும் ஓகஸ்ட் 12ம் திகதி சிங்கப்பூரின் மூன்றாவது பிரதமராகப் பதவியேற்கவிருக்கும் லீ ஷீன் லூன் தனது புதிய அமைச்சரவையை விரைவில் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




சிங்கப்பூரின் பிதாமகர் என்று வர்ணிக்கப்படும் லீ குவான் யூ வின் மகனான லீ 52 வயது நிரம்பியவராவார். இவரது அமைச்சரவை பெரும்பாலும் இளம் பிரமுகர்களைக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய பிரதமரின் கருத்துப்படி அமைச்சரவை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுவிட்டதாகவும், அவரது ஆட்சிக்கால முடிவின் போது பதவியைப் பொறுப்பேற்கக்கூடிய ஒருவரை உதவிப் பிரதமராகத் தெரிவதிலேயே காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை லீ யின் நெருங்கிய ஆலோசகரும் முந்நாள் மத்திய வங்கியின் நாணய சேவை அதிகாரியுயான தர்மன் சண்முகரட்ணம் நிதியமைச்சராக நியமிக்கப்படவுள்ளதாக லீ அறிவித்துள்ளார். ஏனைய விபரங்கள் வெகுவிரைவில் அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (யே)

WORLD NEWS
உலக தரிசனம்

# பஸ்–ரயில் மோதலால் துருக்கியில் 14 பேர் பலி

(இஸ்ரான்புல் )

துருக்கியின் மேற்குப் பிரதேசமான ஐடினில் பயணிகள் மினிபஸ் ஒன்றை ரயில் வண்டி ஒன்று மோதியதில் அதில் பயணம் செய்த 14 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இதில் 5 பேர் சிறுவர்களாவர்.

இஸ்மிரிலிருந்து டெனிஸிலில் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த ரயில் வண்டியின் எச்சரிக்கைச் சமிக்ஞைகளையும் பொருட்படுத்தாமல் மினிபஸ்ஸின் சாரதி ரயில்வேக்கடவையைக் கடக்கமுற்பட்டபோது. பஸ்வண்டி ரயிலால் மோதப்பட்டு சுமார் 850 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டதாகச் சம்பவத்தினை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

மேற்படி பஸ்வண்டி திருமண வீட்டொன்றிற்குச் சென்று கொண்டிருந்ததாகவும் 19 பேர் இதில் பயணம் செய்ததாகவும் அறிவிக்கப்படுகிறது. கடந்த வாரமும் அதிவேகம் காரணமாகத் துருக்கியில் ஏற்பட்ட ரயில் விபத்தில் 36 பேர் கொல்லப்பட்டனர். (யே)

# பயங்கரவாதிகளின் மிரட்டலுக்கு அவுஸ்திரேலியா பயப்படாது

(சிட்னி)

பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு அவுஸ்திரேலியா ஒருபோதும் பயப்படமாட்டாது என்று அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டவுனர் தெரிவித்துள்ளார்.




அல்-குவெய்டா இயக்கத்துடன் தொடர்புள்ள இஸ்லாமிக் தௌகிட் எனும் இயக்கம் இஸ்லாமிய இணையத் தளமொன்றில வெளியிட்டுள்ள எச்சரிக்கையில் அவுஸ்திரேலியாவும், இத்தாலியும் ஈராக்கில் இருந்து தமது படைகளை வாபஸ் வாங்காமற்போனால் அந்நாடுகளில் கார்க்குண்டுகள் வெடிக்கும் என்று எச்சரித்துள்ளது.


ஈராக்கில் அவுஸ்திரேலியா 880 துருப்புக்களையும் இத்தாலி 2700 துருப்புக்களையும் வைத்திருக்கின்றனர். மேற்படி எச்சரிக்கையை அதி தீவிரமாகக் கவனத்தில் எடுத்துள்ளதாகவும் அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

(யே)

Tour de France Diary

# ஆறாவது தடவையும் ஆம்ஸ்ரோங் சம்பியன் பட்டத்தை வென்றார்

உலகின் மிக மிக ஆழமான போட்டி என்று வர்ணிக்கப்படும் ரூர் டி பிரான்ஸ் சைக்கிள் ஓட்டப்போட்டியில் தொடர்ச்சியாக ஆறாவது முறையும் அமெரிக்காவின் டெகஸாஸ் மாநிலத்தைச்சேர்ந்தவரும் அமெரிக்க போஸ்டல்






அணியின் தலைவருமான லான்ஸ் ஆம்ஸ்ரோங் சம்யியன்விருத்தை வென்றார்.

அவரது தாயாரும், அவரது காதலியும், (பொப்பாடகி ஷேர்லிகுரோ) பெருமையுடன் பார்த்துக் கொண்டிருக்க லட்சக்கணக்கான மக்கள் டெக்ஸாஸ் மாநிலக் கொடிகளையும், அமெரிக்கக் கொடிகளையும் அசைத்துக் கொண்டிருக்க வரலாற்றுச் சிறப்புமிகு சாதனை படைத்தவராக வெற்றி அரங்கினுள் பிரவேசித்தார் லான்ஸ் ஆம்ஸ்ரோங்.


நேற்று முன்தினம் இடம்பெற்ற இறதியும் 20வதுமான சுற்றில் பெல்ஜிய வீரர் ரொம்பூணன் வெற்றிபெற்றார்.

இப் போட்டித் தொடரில் சுமார் ஆறு நிமிடங்களுக்கும் அதிகமான இடைவெளி முந்நிலையை ஆம்ஸ்ரோங் பேணினார். டிஸ்கவரி சனல் அலைவரிசையே ஆம்ஸ்ரோங்கின் பிரதான அனுசரணையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் அடுத்தவருடம் இப் போட்டியில்தான் பங்குபற்றுவது குறித்து நிச்சயமற்ற ஒரு நிலைப்பாட்டில் அவர் கருத்து வெளியிட்ட போதும், முற்றான நிராகரிப்பு எதையும் அவர் வெளியிடவில்லை.

ரூர் டி பிரான்ஸ் சைக்கிள் ஓட்டப்போட்டியின் ஜாம்பவான்கள் என்று கணிக்கப்படும் எடிமேர்க்ஸ், பேர்னாட் ஹினோல்ட், மிக்குவேல் இந்தூரியன் ஆகியோரது சாதனைகளையெல்லாம் ஓரம்கட்டி ஆம்ஸ்ரோங் இவ்வருடம் ஆறாவது தடவையும் சாதனை புரிந்துள்ளார். இவ்வருடம் போட்டிகளில் ஜேர்மனியின் அன்ரீஸ் குளோடன் இரண்டாமிடத்தையும் இத்தாலியர் இவான் பாஸோ மூன்றாமிடத்தையும் பெற்றனர். (யே)

# 478 வெற்றி இலக்கை நோக்கி மேற்கிந்திய அணி

தற்பொழுது லோட்ஸ் மைதானத்தில் இடம்பெற்றுவரும் இங்கிலாந்திற்கெதிரான நான்காவது நாள் ஆட்ட முடிவின்போது மேற்கிந்திய அணி 114ஓட்டங்களுக்கு மூன்று விக்கெற்றை இழந்திருந்தது.





முன்னதாகத் தமது இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடிய இங்கிலாந்து அணி 325ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெற்றுக்களை இழந்து ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இங்கிலாநது அணித்தலைவர் மைக்கல் வோகன் ஆட்டமிழக்காமல் 101ஓட்டங்களையும், அன்ரூ பிளின்டொவ் 42பந்துகளுக்கு 58ஓட்டங்களையும் பெற்றனர்.

478ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாட ஆரமபித்த மேற்கிந்தியத் தீவகள் அணியினர் 114ஓட்டங்களுக்கு மூன்று விக்கெற்றுகளை இழந்தனர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிரிஸ் கெயில் 81ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஸ்ரீபன் ஹமிசனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

டெவோன்ஸ்மித் 6ஓட்டங்களுக்கும் ராம்நரேஷ் சர்வான் நான்கு ஓட்டங்களுக்கும் மத்தியூ ஹேடன் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். தலைவர் பிரையன்லாரா ஆட்டமிழக்காமல் 11ஓடடங்களுடன் களத்திலிருந்தார். (யே)

# கோபாக் கிண்ண இறுதி பிரேஸிலுக்கு வெற்றி

நடைபெற்றுவந்த தென் அமெரிக்க நாடுகளுக்கிடையிலான வருடந்த கோபா அமெரிக்கக் கிண்ணப் போட்டிகளின் இறுதிப் போட்டியில பிரேஸில் அணி ஆர்ஜென்ரீன அணியை 4-2எனும் கோல் கணக்கில் வென்று கிண்ணத்தைச் சுவீகரித்தது.





உலகச் சம்பியன்களான பிரேஸில் அணியினர் தோல்வியின் விளிம்பிலிருந்து மயிரிழையில் தப்பிப் பிழைத்தனர். முந்நாள் உலகச் சம்பியன்களான ஆர்ஜென்ரீனர்கள் 2-1 எனும் நிலையில் முந்நிலையில் இருந்தனர் பிரேஸிலின் அட்ரியானோஸ் போட்ட கோலினால் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

பண்ணர் இடம்பெற்ற பெனால்டி முறையிலான தீர்ப்பில் பிரேஸில் 4-2எனும் கோல்க்கணக்கில் வெற்றி பெற்றுக் கிண்ணததைச் சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது. (யே)

# பிரிட்டிஷ் கிராண்ட் பிரிக்ஸ வலன்ரீனோ ரோஸி லாவகம்

நேற்று முன்தினம் பிரிட்டனின் டெனிஸ்டன் ஓடுபாதைகளில் இடம் பெற்ற பிரிட்டிஷ் கிராண்ட் பிரிக்ஸ் மோட்டார் சைக்கிள் போட்டிகளில் யமஹா அணியின் வீரரும் உலகச் சம்பியனுமான வலன்ரீனோ ரோஸி லாவகமாக வெற்றி பெற்றார்.




ஆறாவது தடவையும் உலகச் சம்பியன் பட்டத்திற்குப் போட்டியிடும் 25வயதான ரோஸி 73போட்டிகளில் பெற்ற 38வது வெற்றி இதுவாகும். இந்த சீஸனில் அவா பெற்ற 5வது வெற்றி இதுவாகும்.

புள்ளிகள் பட்டியலில் ஒரு புள்ளியால் முன்னணி வகித்துக்கொண்டிருந்த அவர் இப்பொழுது 164புள்ளிகளுடன் முதலிடத்திற்கு வந்துள்ளார். அவரது ஹொண்டா அணியின் எதிராளிகளான கிபர்னோவும், பியாகியுமதலா 142புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தை வகிக்கின்றனர்.

உலக சுப்பர்பைக் போட்டிகளிலிருந்து கிராண்ட் பிரிக்ஸ் போட்டிகளுக்கு மாறியுள்ள அமெரிக்கா கொலின் எட்வேர்ட் இப் போட்டியில் இரண்டாமிடம் பெற்றார். (யே)

# தனது சாதனையைச் சமன் செய்த மைக்கல் சூமாக்கர்

இந்த சீஸனில் இடம்பெற்ற 12போட்டிகளில் பதினொன்றை வென்று 2002ஆம் ஆண்டில் தான் செய்த பழைய சாதனையை ஜேர்மன் வீரரும் பெராரி அணிச் சாரதியுமான மைக்கல் சூமாககர் சமன் செய்தார்.



நேற்று முன்தினம ஜோமனியில் இடம் பெற்ற ஜேர்மன் கிராண்ட் பிரிக்ஸ் போட்டியிலேயே அவர் இச்சாதனையைப் புரிந்தார்.

வாழ்நாளில் அவர் பெறும் 81வது கிராண்ட் ப்ரிக்ஸ போட்டி வெற்றி இதுவாகும். இதன் மூலம தொடர்ந்தும் ஏழாவது தடவையாகவும் உலகச் சம்பியன்பட்டத்தை வெல்லும் பட்டியலில் மைக்கல் சூமாக்கர் மிக முன்னணியில் நிற்கின்றார். அவருக்கு மிகவும் போட்டியாக விளங்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட மக்-லாரன் அணியாளரின் டேவிட் கோல்தாட் நான்காவது இடத்தையே பிடித்தார். பிரிட்டனின் வளர்ந்துவரும் தாரகையான ஜோன்சன் பட்டன் இரண்டாம் இடத்தைப்பெற்றார். (யே)

# விளையாட்டுச் செய்திகள்

ATHENS 2004


ஒலிம்பிக்கிற்கு இன்னும் 17 தினங்கள்

## எதென்சுக்கு வாருங்கள் பகுதி IX

# எதென்ஸ் ஒலிம்பிக் மைதானங்கள் மார்க்கோ போலோ மத்திய ஸ்தானம்

எதென்ஸ்சுக்குத் தெற்கே சுமார் 28கிலோமீற்றருக்கப்பால் அமைக்கப்பட்டுள்ள மார்க்கோபோலோ மத்திய ஸ்தான விளையாட்டு மைதானத்தில் குதிரையேற்றம் மற்றும் துப்பாக்கி சுடும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

சுமார் ஆறாயிரம் பார்வையாளரை உள்ளடக்கக் கூடிய சுமார் நான்கு பாரிய பார்வையாளர் அரங்குகளைக் கொண்டுள்ள இம் மைதானம் ஒன்பது இலட்சத்து நாற்பதாயிரம் சதுர மீற்றர் பிரதேசத்தை உள்ளடக்கியுள்ளது. 300குதிரைகளுக்கான குதிரைலயங்களும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.



குதிரையேற்றத்திற்கான பகுதியில் 7,800கதிரைகளும், ஏனைய போட்டிகளுக்காகப் 19,100கதிரைகளும் போடப்பட்டுள்ளன. ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதிவரையும் இங்கு போட்டிகள நடைபெறவுள்ளதுடன் செப்டம்பர் 18தொடக்கம் 26வரை பரா ஒலிம் பிக்ஸ் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

எதென்ஸின் அற்றிக்கா பிரதேசம் ஒலிவ மரங்களுக்கும், பசுமையான புல் வெளிகளுக்கும் பெயர் போன இடமாகும். இவ்வாறான ஒரு பகுதியில்தான் மார்க்கோ போலோ அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. (யே)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

## ENGLISH LANGUAGE
## Part - II

Hour-2

By: B.S.A. Ariaratnam, (E.T.T)
Kopay Christian College.

1. You promised to meet a friend at his office at 3 p.m today, but . you are unable to meet him. write a note , giving your reasons say that you will meet him tommorrow at the same time

**Read the passage and fill in blanks given below**

Charles martin was born in 1906.In 1922,he left India and Went to London. He Was a journalist With the"Daily Mail" in London , For six years. In 1930 he left the "Daily Mail" and married Janet owen.charles, Janet and three friends started a news agency "World News"in 1931. the agency sold photographs and articles to "World News" in England. He Wrote two books "Iran in 1936 and changes" -a book about India in 1938. He visited Algeria For three months in 1938 and then he went to Turkey and lived there for four years. he died in Beirut in 1942.

1. Name.................................... 2. Year of birth..................................
3. married to.......................... 4. Year of marriage................................
5. Job......................... 6. Names of his publications ......................
7. Years of Death ..................... 8.Names of the News agency...................

**2.Read the Folling poem and answer the questions given below**


**I am the wind**

I am the wind
Running a reckless race
Through the town and countryside,
over the hills, across the fields
over the ocean, beside rivers
Blowing clouds across sun's face,
Buffering birds. flying home
I fight the trees, taking away
Their covering of leaves
stealing boats and filling then the sails
of a sailling yacht
I am the wind do running a reck less race
Against my self.

**Questions:-**

(i) Through what does the wind race?
(ii What does the wind do to the sun?
(iii)How does the wind fight the trees?
(iV) What happens in the ocean when the wind runs over it?
(V) Underline the correct sentence.
a. The wind is running with the birds.
b. The wind is running against its ownself.
c. The wind is running with my self.

**3.The following graph shows 2 survey done in a year eleven class of a leading school in jaffna.Each student the type of books he/ she liked to read most. study the graph given below and answer guestions.**




Type of Bookes

A- Detectives
B- Comics
C- Romance
D- Science
E- Adventures

1.How many students like comics?.............................
2.What type of books do more than one third the class like to read?.................
3.What percentage of students enjoy reading adventures?.....................
4.How does the number of comic fans compare with those Who love adven tures ?(give the ratio)........................
5. what are the two types of books that most of the children seem to like?.....................
6. Most of the students are not interested in the science books Is it correct?.........................
7.Fifty percent enjoy romance Is it correct?..........................
8. How many students are there in the class?....................... (24 marks)

**4 Read the following text and fill in the blanks with suitable prepositions given in the box**

of, by, for, of,to,in

Road sefety is very essential (1)..........................road. Users( 2) ............... Our country,because many accidents take place daily. Highway code is a set (3).................. rules that are followed.(4) .................... motorists .The motorists are expected (5) ..................... follow the Highway Code (6) .................... their own sefety.

**5. Read the fololwing text and answer the questions below.**

Tea is the most Common drink in the world. It Was about 5000 years ago thet the Chinese. First started drinking tea not only to guench. their thirst but also to get their nerves stimulated. The British started tea planting only 300 years ago.

Sri lank's tea industry is a legacy of the British Today many countries in the world grow tea. Srilanka, Burma,china, India, and Fapan are some of them.It is also the main export of many countries of The world including Srilanka. The country whichconsumes the largest quantity of tea is said to be England.

**Questions:-**

(i). Mention the most common drink in the world?
(ii). Why do the chinese started drinking tea?
(iii). When did the British start planting tea?
(iv). Mention there countries where tea is grown?
(v). Which is the country that consumes the largest quantity of tea?

**6.Read the follwing text and answer the questions given below**

The structure of the virus.

viruses, unlike other organisms are not made of cells. there fore, they lack some of the substances needed to live on their own. A typical virus has two basic parts, a core of nucleic acid and an outer coat of protein. the nucleis acid contains the genes or instruction which will determine how the organism will reproduce and develop.All other organisms larger than the virus have two types of nucleic acid, DNA and RNA. the virus has only one type of nucleic acid either DNA or RNA, never both. Hence, the virus is not a complete organism by itself. It enters another living cell and uses its material to live and reproduce.

the poteen coat of the virus gives it its shape. some are like him rods, others spherical,or tadpole like with tails attached. the protein coat also protects the recleic acid and help it to get unside a cell.

**Questions:-**

i) Say whether the following statements are true of false by writing "T"or "F" against each sentence.
a.Viruses are different from other organisms because they are not maile of cells.
b. The core and the outer coat of a virus contain water and skin respec tively .
c. The protein coat of the virus gives its shape.
ii) Do all viruses look the same?
iii) Write the sentence which olescribes the shapes of the viruses?
iv) What do the core and the outer coat of virus contain?

**7.Write on any one of the following topics.Use about 200 words.**

a.Tourism in Srilanka explainwhat tourism is advantages and disadvantages your suggestions for improving tourism in Srilanka.
b.The profession you wish to choose reasons for your choicehow you intens to prepare for the profession?
what will you do in future?
c. The role of women in the society women's role- then and now problems coused by the change in the traditional role.
The need for a dual income your suggestions about the dual role conclusion

## பகுதி I ற்கான விடைகள்

Answers to
Question no-1
Example -3
6
4
1
5
2

Question no-2
Example- a.There is a cat under the bed.
b.There are some books on the table
c.There is a bag on the chair
d.There is are two boys near the door
e. There is a car under the tree
f.There is a cake in the box

Question no-3
Example- a. Sampath
b. Samolun
c. Anver
d. ViJaya
e.Lalani
f.Rajini

Question no-4

| Name | Age | Game |
|---|---|---|
| Hari | 19 Years | Cricket |
| DiLani | 17 Years | Netball |
| Ravi | 15 Years | Foot ball |

Salesman - Mohan
Secretary - Rekha
Author - Suresh
Company director -Ramesh
Radio announcer- Anne
Taxi driver - Nimal

வியாழன் தமிழ் மொழியும் இலக்கியமும் பாட வினாத்தாள் பகுதி-I வெளிவரும்

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூம் இல் - குறள்

வலம்புரி

## பிரித்தாளும் தந்திரத்திற்கு பலியாகிவிடலாகாது!

தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் எண்ணம் சிங்கள அரசிற்கு அறவே இல்லை என்பது தெளிவாகிவிட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தை எனக் கூறிக் கொண்டு காலத்தை இழுத்தடிப்பதன் மூலம் தமிழரின் ஒற்றுமையை - பலத்தை சீர்குலைப்பதே சிங்கள அரசுகளின் நோக்கமாகும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாகக் கூறிக் கொள்வதெல்லாம் வெறும் போலி நாடகம் என்பது தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியாயினும் சரி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியாயினும் சரி எந்தக் கட்சியுமே தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணப்போவதில்லை.

தமிழர் தரப்பில் பலமான அமைப்பாக விடுதலைப் புலிகள் இருப்பதால் விரும்பியோ, விரும்பாமலோ யுத்தநிறுத்த உடன்படிக்கையை செய்துகொள்ள வேண்டிய ஒரு தேவைப்பாடு இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருந்தது.

அவ்வாறு யுத்தநிறுத்த உடன்படிக்கையை செய்து கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தை எனக் கூறி தமிழ் மக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றுவதே சிங்கள ஆட்சியாளர்களின் நோக்கமாகும். இதனை கடந்த கால வரலாறுகள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

உண்மையான விசுவாசத்துடன் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என சிங்கள ஆட்சியாளர்கள் நினைத்திருந்தால் அதனை நிறைவேற்றுவதில் எந்தவித தடையும், தாமதமும் ஏற்பட நியாயமில்லை.

ஆனால், உள்ளொன்று வைத்து புறமொன்றைச் செய்யமுற்படுவதன் காரணமாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாதுள்ளது. விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் செய்து கொண்ட ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி, பேச்சுவார்த்தையை ஒரு பக்கத்தில் நடத்திக்கொண்டு, மறுபுறத்தில் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டது.

தமிழ் மக்களைப் பிரித்தாளும் தனது பழைய தந்திரத்தை அமுல்படுத்தும் நோக்குடன் அமெரிக்காவை இலங்கைக்குள் கூட்டி வந்தது. சமாதானப் பேச்சுக்களை ஒரு கட்டத்தில் நிறுத்திவிட்டு அமெரிக்காவின் துணையுடன் தமிழ் மக்களை அச்சுறுத்துவதே ரணிலின் நோக்கமாக இருந்தது.

இதற்கு அவரின் ஆட்சியில் அமைச்சராக இருந்த மிலிந்த மொறகொட பேருதவி ஆற்றினார். அமெரிக்காவில் பெண் எடுத்த மிலிந்த மொறகொட அமெரிக்காவின் உதவியுடன் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்க முற்பட்டார் என்ற உண்மை என்றோ ஒருநாள் வெளிப்படவே செய்யும்.

சமாதானத்தில் ரணில் அக்கறை காட்டவில்லை என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பதே உண்மை.

இதேபோல் சமாதானம் - நிரந்தரத் தீர்வு என்றெல்லாம் பேசும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் சமாதானத்தில் அக்கறை இல்லை என்ற உண்மையை அவரின் செயற்பாடுகள் உணர்த்தி நிற்கீன்றன.

ஆக, ஒட்டு மொத்தத்தில் சிங்கள ஆட்சியாளர்கள் எவருக்குமே தமிழரின் பிரச்சினையை தீர்த்து வைக்கும் எண்ணம் கிடையாது. அத்தகையதொரு எண்ணம் அவர்கள் யாரிடமேனும் இருக்குமாயின், ஆட்சியில் பலவீனப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசை வீழ்த்தி தாம் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டு இன்ப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்.

ஆனால் அதனைச் செய்வதற்கு சிங்களக் கட்சிகள் எவற்றுக்குமே உடன்பாடில்லை. மாறாக மக்களை பிரித்து தமது சதித் திட்டத்தை நிறைவேற்றுவதே அவர்களின் இலக்காகும்.

## யாழ்.குடாநாட்டில் வாகனம் ஓட்டும்
# 75 வீதமானவர்களிடம் அனுமதிப் பத்திரம் இல்லை
# இவர்களில் அனேகமானோர் மாணவர்கள்
## மாவட்ட சமூக பாதுகாப்புக் குழு சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மோட்டார் சைக்கிள்களை ஓட்டுபவர்களில் 75சதவீதமானவர்களிடம் வாகனங்களை ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரங்கள் இல்லாமையே வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கான அடிப்படைக் காரணமாகும். எனவே சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுபவர்கள் இது குறித்து விழிப்புடன் செயற்பட வேண்டும் என மனித உரிமைகளை மேம்படுத்தலுக்கும் பாதுகாத்தலுக்குமான மாவட்ட சமூக பாதுகாப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இக்குழுவின் கூட்டம் தலைவர் எம்ஹரீபதி தலைமையில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 16 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட பாடசாலை மாணவர்கள் வாகனங்கள் ஓட்டுகின்றனர். அறிவு,அனுபவம் அற்ற நிலையில், அனுமதிப்பத்திரங்களும இல்லாமல் இவர்கள் மோட்டார் சைக்கிள்களை வீதிகளில் அதிவேகமாக ஓட்டுகிறார்கள்.

இது குறித்து இத்தகைய மாணவர்களின் பெற்றோர்களோ, ஆசிரியர்களோ அல்லது பொலிஸாரோ இதுவரை நடவடிக்கைகள் எதுவும் எடுக்காமல் இருக்கின்றனர். இதனாலேயே இன்றைய காலகட்டத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

எனவே, இத்தகைய சீர்கேடான நிலைகளைக் குடாநாட்டில் எதிர்வரும் நாட்களில் இல்லாமல் செய்ய வேண்டும். தவறும் பட்சததில் குடாநாட்டில் வீதி விபத்துக்கள் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

(உ-16)

## இலங்கை கடற்படையில்
# நவீன கனரக ஆயுத பலம் பொருந்திய
# சிறப்புக் கடல் அதிரடிப்படை அமைப்பு

(கொழும்பு)

சிறப்பு கடல் அதிரடிப்படை எனப்படும் புதிய படைத்துறை ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நவீன கனரக ஆயுதங்களுடன் அமைந்த இக் கடற்படைத் தளபதி கடலில் இருந்து தரைக்குச் சென்று தாக்கும் ஆற்றல கொண்டதெனவும், உலகில் உள்ள சிறப்புப் படைத் துறைகளுக்கு சம பலம் கொண்டதெனவும் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி தெரிவித்துள்ளார். இப்புதிய கடற்படையின் சாகச நிகழ்ச்சிகள் திருகோணமலை கடற்படைத் தலைமையகத்தில் அண்மையில் இடம்பெற்றபோது கடற்படைத்தளபதி வைஸ்அட்மிரல் தயா சந்தகிரி உள்ளிட்ட முக்கிய படைத்துறை அதிகாரிகள் அதில் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில், கறுப்பு நிற சீருடையுடனும, நவீன கனரக ஆயுதங்களுடனும் கூடிய இச்சிறப்புக் கடற்படையினர் தமது சாகசங்களைச் செய்து காட்டியுள்ளனர்.

இதேவேளை, சர்வதேச கடல் பாதுகாப்புத் தொடர்பாக சாவதேச கடற்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கென கடறபடைத் தளபதி தயா சந்தகிரி இலண்டனுக்கு விஜயம் செய்துள்ளார்.

சாவதேச நாடுகளின் கடற்படைகள் அங்கம் வகிக்கும் சர்வதேச கடற்பாதுகாப்பு அமைப்பின் அழைப்பின் பேரிலேயே இவா இலண்டனுக்குச் சென்றுள்ளார். இவருடன், கடற்படைத் தளபதி ஜெயந்த பெரேரா, கடற்படை நடவடிக்கைகளின் இயக்குநா டுலிப் விஜேசேகரவும் இலண்டனுக்குச் சென்றுள்ளார்.

**International merine organization** எனப்படும் இவ்வமைப்பு, 2000 ஆம் ஆண்டு செப்டெம்பா மாதம் 11ஆம் திகதி அமொிக்காவின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து, கடல் வழியான தீவிரவாத நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்துவதற்கென அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

(உ-121)

## மலேசியாவில் வேலை செய்யும்
# இலங்கையர் நலன் பேண இரு தரப்பு உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இருந்து மலேசியாவிற்கு வேலை வாய்ப்புத் தேடிச் செல்வோரின் நலன்களைப் பேண வேலை வாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக மலேசிய அரச அதிகாரிகளுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அதாவுடசெனவிரட்ண விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதன் போது, இலங்கையர்களை மலேசியாவில் பணிக்கமர்த்துவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் தற்பொழுது மலேசியாவில் பணிபுரிந்து வரும் இலங்கையாகளினது சேமலாப நலன்கருதும் நடவடிக்கைகள் என்பன குறித்துப் பேச்சப் படவுள்ளதுடன வேலைவாய்ப்பினை இலங்கையர்களுக்கு வழங்குவது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வது பற்றியும் கவனம் செலுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(உ-4,64,62)

# குடாநாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட பொலிஸார் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களைத் தடுக்கும் வகையில் இரவுநேர ரோந்து நடவடிக்கைகளைப் பொலிஸார் அதிகரித்துள்ளனர்.

அத்துடன், கிராமங்கள் தோறும் விழிப்புக் குழுக்களை அமைத்து சமூகவிரோதிகளது செயற்பாடுகள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

வீதிவிபத்துக்களைத் தவிர்க்கும் பொருட்டு வீதிச் சமிக்ஞை விளக்குகளைப் பொருத்தவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் வீதி ஒழுங்குகளை மீறும் சாரதிகள் மீதும் கடும் சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (உ-4,61)

## ஓம் திணசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எல்லா யோகங்களும் வேறுபாடில்லாமல் மனிதனை விடுதலையை நோக்கியே அழைத்துச் செல்கின்றன. இங்கே விடுதலை என்று குறிப்பிடுவது முழுமையான விடுதலையாகும். தீமையின் பிடியிலிருந்தும் அதுபோலவே நன்மையின் பிடியிலிருந்தும் முழுக்க முழுக்க விடுதலை பெற வேண்டும். ஒரு இரும்புச் சங்கிலி எப்படி விலங்கோ அப்படியே தங்கச் சங்கிலியும் நமக்கு விலங்கு தான்.

சுவாமி வீவேகானந்தர்

## மேன்முறையீடு செய்த
# கிராம உத்தியோகத்தர்களுக்கு நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்குப் பகுதிகளிலுள்ள கிராம உத்தியோகத்தர்களில் தரம்-1 ற்கான பதவியுயர்வு கிடைக்கப் பெறாது மேன்முறையீடு செய்தவர்களுக்கான நேர்முகப் பாட்சை அடுத்த மாதம் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற அமைச்சு அதிகாரிகள் மற்றும் வடக்கு-கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளின் போதே நேர்முகப் பாட்சை குறித்த இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மேற்படி பேச்சுவார்த்தைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, வடக்கு- கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் ப.வசந்தகுமார், செயலாளர் கே.வாமதேவன், இணைச் செயலாளர் க. பரஞ்சோதி மற்றும் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஜே. எம்.கருணதாஸ ஆகியோர் கலந்துகொண்டனர்.

★ கிராம உத்தியோகத்தர் சேவையில் தரம்2ல் 10வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களுக்கும் பரீட்சை மூலம் தரம் 1 ற்கான பதவியுயர்வு வழங்கப்பட வேண்டும்.

★ 15 வருடகால தொடர்ச்சியான சேவை நிபந்தனை தளர் த்தப்பட வேண்டும்.

★ கிராம உத்தியோகத்தர்களுக்கு விஷேட தர (தப்பறா) பதவியுயர்வு, மற்றும் தரம் 1ல் 5வருடகால சேவையைப் பூர்த்தி செய்தவர்களுக்குப் பரீட்சை மூலமும், சேவை மூப்பு, திறமை ஆகியனவற்றின் அடிப்படையிலும் சித்தியடைந்து, முன்னுரிமைப் பட்டியலில் காத்திருப்பவர்களுக்குப் பதவியுயர்வு வழங்கப்பட வேண்டும்.

★ 33/95 சுற்று நிருபத்தின் படி, கிராம உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படாமல் நிலுவையாகவுள்ள 5 மாதகால சம்பளத்தை உடனடியாக வழங்கவேண்டும்.

★ கடந்த கால் போரினால் ஏற்பட்ட சொத்து இழப்புக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவை கிராம சேவையாளருக்கு உடன் வழங்க வேண்டும். அத்துடன் தளபாட உபகரணங்களையும் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் போன்ற கோரிக்கைகளும் இச் சந்திப்பின் போது முன்வைக்கப்பட்டன.

(உ-18)

# கடற்றொழிலாளர்கள் மீது கடற்படையினர் நேற்று சூடு

(திருநெல்வேலி)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள உடுத்துறை கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று அதிகாலை நாகர்கோவில் கடற்பகுதியில் படகுகளில் சென்ற மீனவர்கள் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடமராட்சிக் கடற்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களின் படகுகள் கடலலை காரணமாக நாகர்கோவிலுக்கு அப்பால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள உடுத்துறை கடற்பகுதிக்கு அடித்துச் செல்லப்படுகின்றன. இதனால் அப் பகுதியிலேயே மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டுவருகின்றனர்.

கடற்றொழில் முடிவடைந்ததும் மீண்டும் வடமராட்சிக் கரையை அடைவதற்கு நாகர்கோவில் படைமுகாம் சார்ந்த கடற்பகுதி ஊடாகவே மீனவர்கள் செல்லவேண்டியுள்ளது. இவ்வாறு சென்றுகொண்டிருந்த மீனவர்களின் இரண்டு படகுகள் மீதே நேற்று அதிகாலை படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து பாதுகாப்புக்காக படகில் இருந்த 4 மீனவர்களும் கடலில் குதித்து தமது உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கையில், சம்பவ இடத்திற்கு சென்ற கடற்படையினர் அவர்களைக் காப்பாற்றி கரைக்கு அனுப்பிவைத்ததுடன், எச்சரித்ததாகவும் கூறப்படுகிறது.

சம்பவத்தின்போது மீனவர்கள் எவருக்கும் காயங்கள் எவையும் ஏற்படவில்லை. எனினும், படகுகள் சேதத்திற்கு உள்ளானதாகத் தெரியவருகிறது. (த- 43)

# இனஅழிப்பு நடவழக்கையே 1983ம் ஆண்டில் இடம்பெற்றது

## எழிலன் தெரிவிப்பு

(திருகோணமலை)

1983ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்டது இனக்கலவரமல்ல. பத்திரிகைகள் இதனை இனக்கலவரமென எழுதுகின்றன. இதுவொரு இனஅழிப்பு நடவடிக்கையென தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

திருமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கறுப்பு ஜூலை நினைவு தினத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எழிலன் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு 2 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டதோடு, பல கோடிக் கணக்கான பெறுமதிவாய்ந்த தமிழர்களின் சொத்துக்களும் எரிக்கப்பட்டன. 300 இற்கு மேற்பட்ட பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர்.

1958 ஆம் ஆண்டிலும் இவ்வாறான இனஅழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றது. தமிழ் இளைஞர்கள் 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆயுதம் ஏந்திப் போராடியதன் பின்னரே இந்த நிலைமை மாறியுள்ளது.

விடுதலைப் போராட்டம் காரணமாக தமிழ்மக்கள் அச்சமின்றி தலைநிமிர்ந்து மற்றவர்களுடன் சமனாக நிற்கின்றார்கள்.

விடுதலைப் புலிகள் போர் வெறியர்களாக இருக்கவில்லை. ஆனால் போரின் கொடுமை, அதன் கடினம், வேதனை என்பனவற்றை அனுபவித்தவர்கள் - அதன் கொடுமைகள் அவர்களுக்குப் புரியும்.

போரைநிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த விடுதலைப் புலிகள் விரும்புகிறார்கள். போர் எம்மீது திணிக்கப்பட்டால், அதனை வெற்றிகொள்வதற்கும் நாங்கள் தயாராகவுள்ளோம். தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வுகாணப்படவேண்டும்.

விடுதலைக்கான உச்ச சிந்தனையை 1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் தூண்டியவர்களான குட்டிமணி, தங்கத்துரை ஆகியோர் இனக்கலவரத்தில் உயிரிழந்தார்கள். அவர்களை எந்தவொரு தமிழ்மகனும் மறந்துவிடக்கூடாது எனத் தெரிவித்தார். (உ-121)

# அ.அட்டை மோசடி குறித்து பொலிஸாரிடம் அறிக்கை

(கொழும்பு)

போலி விபரங்கள் அடங்கிய தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகள் குறித்து விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு தாம் பொலிஸாரிடம் கோரியுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்த விசாரணையின்போதே போலியான விபரங்கள் அடங்கிய தேசிய அடையாள அட்டைகள் தயாரிக்கும் நடவடிக்கைகள் அம்பலமாகியதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, தென்பகுதியில் அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்களுக்கு இத்தகைய போலி அடையாள அட்டைகளை தயாரிப்பவர்கள் உதவுவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னும் பூர்த்தியடையவில்லை.

விசாரணைகள் பூர்த்தியடைந்ததும் இது தொடர்பான பூரண அறிக்கை ஒன்றை அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவிடம் தாம் கையளிக்கவுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (உ-61-10)

# விடார் ஹெல்கிசனுடன் ஹக்கீம் இன்று பேச்சு

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை இன்று சந்தித்துப் பேசவுள்ளார்.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக சிறிய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டத்தின் ஒரு கட்டமாகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்களை விடார் ஹெல்கிசன் இன்று சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம்.பிக்களும், கட்சியின் உயர்பீட உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளதாக கட்சியின் செயலாளர் எம்.ரி. ஹசன் அலி தெரிவித்துள்ளார்.(ம)

## விடயங்களை உரியவாறு...

அவர் மேலும் தெரிவிக்கையில், சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்த சாத்தியங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் நேற்று கலந்துரையாடினோம்.

நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்தல் ஆகியவை தொடர்பான அரசாங்கத்தின் செய்தியுடனேயே கிளிநொச்சி சென்றிருந்தோம். இந்த விடயங்கள் தொடர்பாக அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் ஆராய்ந்துவருவதால் அது தொடர்பான விளக்கங்களை தற்போது வெளியிடவிரும்பவில்லை.

இந் நிலையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையானது தற்போது வலுவிழந்து வருகிறது. இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. அரசும் விடுதலைப் புலிகளும் விடயங்களை உரியவாறு கையாளாவிட்டால் சிறிய சம்பவங்களும் அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

இதேவேளை, கொட்டாவ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக போதிய ஆதாரங்கள் கிடைக்கும்வரை கருத்துக்கள் கூறமுடியாது என்றும் ஹெல்கிசன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ம)

## கருணா குழு...

ளுக்கு சர்வதேசரீதியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு ஒத்ததாக, தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (121)

## ஹெல்கிசன்...

இச்சந்திப்புக்களில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரும் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ரட்ணசிறியின் விஜயம் திடீர் ரத்து

(வவுனியா)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் வவுனியா விஜயம் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அவர் இன்று வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்டு பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய விருந்தார். எனினும் அவரது விஜயம் ரத்தானமை குறித்து எவ்வித தகவலும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை, கடந்த 12 ஆம் திகதி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் யாழ்ப்பாணம் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-13)

## நூல் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

சித்தங்கேணி, சங்கானை மக்கள் வங்கியின் அனுசரணையுடன் சங்கானைக் கல்விக்கோட்ட அதிபர் சங்கத்தினால் வெளியிடப்படும் புலமைப்பரிசில் வழிகாட்டி நூல் வெளியீட்டு விழாவும் - பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் பிற்பகல் 2.30 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்லையா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில், வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (ச)

## முன்பள்ளி திறக்கப்பட்டது

(வவுனியா)

டென்மார்க்கில் வாழும் இலங்கைத் தமிழர்கள் அன்பளிப்பாக வழங்கிய 8 லட்சம் ரூபா நிதியுதவியில் புளியங்குளம் பகுதியில் முன்பள்ளிக் கட்டடம் ஒன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இக்கட்டடத் திறப்புவிழாவில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், வவுனியா மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் ஞானவேல் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் றெஜி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-13)

## நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வியற் கல்லூரி ஆசிரிய கல்வியியலாளர் க.இ.கமலநாதன் எழுதிய 'அன்பினில் விளைந்த' என்னும் நாடகம் நாளை மாலை 2.30 மணிக்கு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் அரங்கேற்றப்படவுள்ளது.

இந் நாடகம் கல்வியியற் கல்லூரி அரங்கவியல் மாணவர்களின் 6ஆவது ஆற்றுகைத் தொடர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் தமிழீழ காவல்துறை - புலிகள் இணைந்து தேடுதல் நடவடிக்கை

(மட்டக்களப்பு)

கொக்கட்டிச்சோலையின் சில சந்தேகத்திற்குரிய பகுதிகளில் கடந்த சனிக்கிழமை தமிழீழ காவல்துறையினரும், விடுதலைப் புலிகளின் மாவடி முன்மாரிக் கோட்டப் படையணிப் போராளிகளும் இணைந்து திடீர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதேவேளை, இத்தேடுதல் நடவடிக்கையின்போது சில முக்கிய தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இரகசிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தமிழீழ காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்நடவடிக்கையினை தமிழீழ காவல்துறையின் மட்டு. - அம்பாறை மாவட்ட கண்காணிப்பாளர் ச.தமிழரசன், மாவடி முன்மாரிக்கோட்ட இராணுவத் தளபதி ரமணன் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் துணைத்தளபதி யோகராஜ, மட்டு. அம்பாறை காவல்பணிமனைப் பொறுப்பாளர் அஜந்தன் ஆகியோர் நடவடிக்கை மேற்கொண்டனர். (ச-121)

## குண்டுவெடிப்பில்...

ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டான்.

அருகிலிருந்த இருவர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம)

## சங்கமம் நிகழ்வு

(திருநெல்வேலி)

வடமராட்சிப் பிரதேச வீரமுரசம் கலையரங்கு நிகழ்வு நேற்று முன்தினம் கரவெட்டி இராச கிராமத்தில் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் அ.மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை இரண்டாம் லெப். பன்னீர்ச்செல்வன், இரண்டாம் லெப். உலகப்பன் மற்றும் வீரவேங்கை உலகரசி ஆகியோர்களின் தந்தையர்கள் ஏற்றிவைத்தனர்.

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். மாவட்ட உறுப்பினர் பா.தவயோகம், ஊடகப் பேச்சாளர் பா. கனகலிங்கம் மற்றும் யாழ். மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர்.

இதனைத் தொடர்ந்து வில்லுப்பாட்டு, நடனம் உட்பட மற்றும் பல கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (த-43)

## கிழக்கில் உருவான...

கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடுவப் பணியகத்தில் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின்போது விடுதலைப் புலிகளின் சார்பில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும்,

நோர்வேத் தரப்பில் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சுமார் ஒன்றரை மணிநேரமாக இடம்பெற்ற இந்தச் சந்திப்பு வெற்றியளிக்கவில்லையாயினும், இருதரப்பினரும் மனம்விட்டுப் பேசிக்கொண்டனர். இப் பேச்சுவார்த்தைகளை அடுத்து தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்திருப்பதாவது,

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் இலங்கை அரசாங்கத்தின் சார்பான எந்தவிதமான செய்தியையும் கொண்டுவரவில்லை. ஆனாலும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரை முன்னர் சந்தித்தபோது அவர்களிடம் வலியுறுத்திய கருத்துக்களையே நேற்றைய கூட்டத்திலும் வலியுறுத்திக் கூறினோம். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதக் குழுக்களின செயற்பாடுகள் யுத்தநிறுத்த உடன்பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளது. அரச படைகளின் ஆதரவின்றி அங்கு எந்த ஆயுதக் குழுக்களும் இயங்கமுடியாது. எம்மைப் பொறுத்தவரையில் சமாதான முயற்சிகளில் நாம் எந்த விதமான முன்னேற்றத்தையும் காணவில்லை என்றே கூறுவோம்.

ஜனாதிபதி சமாதான விடயங்களில் நேர்மையுடனும், அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். அவரது அமைச்சர்கள், பங்காளிக் கட்சிகள் ஒவ்வொருவரும் சமாதானத்திற்கு விரோதமான கருத்துக்களைக் கூறிவருகின்றனர்.

ஜனாதிபதியும் அவ்வப்போது தனது கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் மாற்றிவருகிறார் என்பதை நோர்வேத் தரப்பினருக்கு விளக்கமாகச் சுட்டிக்காட்டியுள்ளோம். எதிர்காலத்தில் ஏற்படும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தலைமைப்பீடம் தீர்க்கமான முடிவுகளை எடுக்குமெனவும் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். (ம)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாங்கெரு. யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.